# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone: No. 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

86-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1961-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 25-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 12 | 46-ம் இலக்கம்


# ரோமாபுரியில் பாப்பரசரது மகுடாபிஷேகதினக் கொண்டாட்டம்

## அமைதியின்றிக் கலங்கிநிற்கும் உலகிற்குச் சிறந்தவோர் படிப்பினை

ரோமாபுரியில் சம்பேதுருவானவர் மகாலயத்திலே 23-ம் அருளப்ப பாப்பரசரது மகுடாபிஷேக தினத்தையும், 81 வது பிறந்ததினத்தையும் கொண்டாடுமுகமாக மிலான்நகர அதிமேற்றிராணியாரும் கருதினலுமான மொன்ரினி ஆண்டகையவர்கள் திவ்விய பாடற்பூசை நிறைவேற்றினர். அவ்வமயம் உரைநிகழ்த்திய பரிசுத்ததந்தை–தமது மகுடாபிஷேக – பிறந்ததின விழா அர்ச். சிங்கராய பாப்பரசரின் பதினைந்தாம் நூற்றூண்டு விழாவுடன் கொண்டாடப்படுவதால், அதுபற்றி விரைவில் ஒரு பொது நிருபம் விடுக்கவிருப்பதாகக் கூறினர்.

"வயோதிபம், பத்தியைப் பூரணப்படுத்துவதற்காகக் கொடுக்கப்பட்ட காலம்" எனும் அர்ச். சிங்கராய பாப்பரசரின் பொன்மொழிகளை அங்கு குழுமியிருந்த சுமார் 35,000 மக்களுக்கு எடுத்துக் கூறினர். அவ்வமயம் 51 கருதினல்மாரும் அங்கு சமூகமளித்தனர்.

தமது வயோதிபத்தைக் குறிப்பிட்டு, தமது பெற்ரோர் 80 வயதுக்கு அதிகமாக வாழ்ந்தனர் என்றும், தமது பேரனர் 89 வயதில்தான் மரணமானரென்றும், பேரனரின் நான்கு சகோதரர்களும் 80 வயதுக்குமேலாகச் சீவித்தனர் என்றும் கூறினர். அவரது சகோதரர் மூவரும், கன்னியாஸ்திரியான மருமகள் ஒருவரும் இவ்வைபவத்துக்கு வந்திருந்தனர். தமக்கு 80 பராயமானபோதும். கடவுளின் அருள்களுக்கும், இரக்கத்துக்கும் ஏற்க, அவரது சித்தப்படி நடக்கவேண்டுமென்பதே தமது ஒரே ஆவலாகும் என்ருர்.

மேற்படி விழாவுக்குச் சமூகமளித்த 68 பிரதிநிதிகள் பலநாடுகளிலிருந்தும் வந்திருந்தனர். அவர்களுக்குப் பேட்டியளித்துப் பேசிய பாப்பரசர், அவர்கள், பழைய புதிய உலகை நினைப்பூட்டுபவர்களாகவும், பண்டைய கிறிஸ்தவ, கிழக்கு, மேற்கு ஐரோப்பிய நாடுகளையும், அண்மையில் சுதந்திரமடைந்த சில நாடுகளையும் பிரதிபலிப்பவர்களாகவும் இருந்தனரென்று குறிப்பிட்டார்.

இங்கு எல்லாம் அமைதியாக இருக்கின்றது; சாந்தமும், நம்பிக்கையும் நிலவுகின்றது. இது, யுத்த அபாயத்தினல் அச்சுறுத்தப்பட்டு நிற்கும் உலகுக்கு — அமைதியின்றிக் கலங்கிநிற்கும் உலகிற்குச் சிறந்தவோர்எடுத்துக் காட்டாகும். தேசங்களிடையே எத்தன்மையான ஒற்றுமையும்,

[தொடர்ச்சி 8-ம் பக்கம்]

## பொதுச்சங்க ஒத்திகை

இத்திங்கள் 7ஆம் நாள் கூடிய மத்திய குழுவின் 2ஆம் கூட்டம் பொதுச்சங்கத்தின் ஒத்திகை என அழைக்கப்படுகிறது. ஏனெனில், பொதுச்சங்கத்தின் பல முக்கிய பொருட்கள் இப்போது நிர்ணயிக்கப்படும். (1) இக்கூட்டத்தினல் நிர்ணயிக்கப்படும் திட்டங்களைப் பரிசுத்த தந்தை பொதுச்சங்கத் தந்தைகளின் பரிசீலனைக்கு அனுப்பலாம்; (2) பொது விவாதத்தில் உரைகளின் காலவரை, உரைகள் அமையவேண்டிய முறை, முதலியவை நிச்சயிக்கப்பெறும்.

இக்குழுவின் திட்டங்களில் சில விரைவில் ஏற்றுக்கொள்ளப்பெறும். மற்றவை இன்னும் அதிகம் விரிந்த விவாதத்திற்கு அனுப்பப்பெறும்.

இக்கூட்டத்தில் கத்தோலிக்கரல்லாத பார்வையாளரைப் பொதுச் சங்கத்திற்கு அழைப்பதா இல்லையா என்பது விவாதிக்கப்படும். யாரை அழைப்பது, எம்முறையில் அழைப்பது என்பன நிர்ணயிக்கப்படும். இக்குழுவின் விவாதப்பொருள் மேன்மை தங். கர்தினல் பெயா ஆண்டகையால் தயாரிக்கப்பெற்றது. வரும் ஜனவரித் திங்கள் முதல் இம் மத்தியக் குழு ஒவ்வொரு மாதமும் கூடி விவாதிக்கும்.

## போலாந்தில் மரணப் போராட்டம்

கோமுல்காவின் அரசு திருச்சபையோடு மரணப் போராட்டம் ஒன்று தொடங்கியுள்ளது. அவளும் இப் போராட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளாள். ஆனல், மரணம் அவளுடையது அன்று என்பது அவளுடைய ஈராயிரம் ஆண்டின்வரலாறு கண்டபெரும் உண்மை.

திருச்சபையின் கல்வித் துறையில் தொந்தரை செய்துவந்த கோமுல்கா அரசு, இப்போது அவளின் ஆட்சிமுறையிலும் குருக்கள்—விசுவாசிகள் உறவிலும் தலையிட முனைந்துவிட்டது. 1956-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் ஆட்சிப்பீடம் ஏறிய கோமுல்காவின் கம்யூனிஸ்ட் அரசு "எங்கள் அரசு சட்டத்தினின்று வழுவாது நிற்கும்" எனப் பறைசாற்றியது. ஆனல், அன்றுமுதல் இன்றுவரை திருச்சபையிடம் அது கொண்டுள்ள உறவைப் பார்க்குங்கால், எல்லாம் கொம்மியூனிஸ்த அரசின் போலி உண்மைகள் என்பது தெளிவாகின்றது. திருச்சபையோடு செய்யப்பட்டுள்ள உடன்படிக்கை (8-12-1956) முற்றிலும் மறக்கப்பட்டுவிட்டது. மத்திய அரசு முதல் மாகாண அரசு, நகராண்மைக் கழகம்வரை, இவ்வுடன்படிக்கை மதிக்கப்படாமல்தான் இருந்துவருகின்றது. இவ்வுடன் படிக்கைப்படி, மேற்றிராணி ஆண்டகைகள் அரசின் அநுமதியின்றிக் குருக்களுக்கு நியமனம் அளிக்கலாம்; ஆனல், இன்று போலாந்து ஆண்டகைகள் தங்கள் மனவிழைவின்படி குருக்களை நியமிக்க இயலாது தவிக்கின்றனர். அரசின் உத்தரவு தேவையாம். கேட்டாலும் உத்தரவு அளிக்கப்படுவதில்லை. இத்தகராறினல் சில பங்குகள் 15 மாதங்களாகக் குருக்களின்றி இருக்கின்றன. உத்தரவு மறுக்கப்படுகையில், அரசு அதன் காரணத்தைத் தெரிவித்தல்வேண்டும் என்பதும் உடன்படிக்கையின் ஒரு பகுதி. ஆனல், இக்காரணங்களும் அளிக்கப்படுவதில்லை. மாருக, இந்த இந்தப் பங்குக் குருக்களை இங்கு இங்கு மாற்றவேண்டும் என்று அரசு ஆண்டகைகளுக்குக் கட்டளை இடுகின்றது. இதற்கு உதவாக்கரைக் காரணங்களைக் காட்டுகின்றது. இவற்றை நிரூபிக்கக் கேட்கையில் இவை நிரூபிக்க இயலாதவையாக உள்ளன. குருக்கள் அரசினிடமிருந்து பெறும் பயமுறுத்தலும் எச்சரிக்கையும் ஓர் அன்ருட நிகழ்ச்சி. புதுக்கோவில்கள் கட்டத்தடை. பிறர் சிநேக அலுவலாற்றத்தடை. இருக்கும் ஆலயங்கள் அழிக்கப்படுகின்றன;

(?-ம் பக்கம் பார்க்க)



### அர்ச். பட்டத்தின் இறுதிக் கட்டம்

முத். மாட்டின் தெ பொறெசுடைய அர்ச்சியசிஷ்ட பட்டத்துக்குத் தேவையான கடைசிப் புதுமையைத் திருச்சடங்குகளின் சங்கம் அங்கீகரித்துவிட்டது. அர்ச்சியசிஷ்ட பட்டத்துக்கான ஆராய்ச்சி இறுதிக்கட்டத்திலிருக்கிறது.

தென் அமெரிக்காவில் பேரு நாட்டைச்சேர்ந்த லிமாவில், கலப்புமணத் தம்பதிகளின் மகனை முத். மாட்டின் 1579-ம் ஆண்டு பிறந்து, சாமிநாதர் சபைச் துணைச் சகோதரராயிருந்தார். பிறர் சிநேக நற்பணிகளாலும், ஆயுள்காலத்திலேயே புரிந்த அற்புதங்களாலும் பிரபல்லியமடைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்றிராசனங்கள் தரும் செய்தி

### தாண்டவன்வெளியில்

## அர்ச். ஸ்ரனிஸ்லோஸ் திருநாள்

தாண்டவன்வெளிப்பங்கில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பரி. காணிக்கைமாதா பத்திச்சபையினர், அவர்களுடைய சபையின் இரண்டாவது பாதுகாவலராகிய அர்ச். ஸ்ரனிஸ்லோஸின் திருநாளை இம்மாதம் 13-ந்திகதி கொண்டாடினர்.

அன்று காலை இப்பத்திச்சபை வாலிபர்கள், அர்ச். மிக்கேல் கல்லூரியைச்சார்ந்த வாலிப பத்திச்சபையினருடன் ஒன்றுசேர்ந்து, தங்கள் காலைப் பூசையை, அர்ச். மிக்கேல் கல்லூரியில் பக்தியாய் ஒப்புக்கொடுத்தனர்.

அன்று மாலை 6மணிக்கு பங்குத் தேவாலயத்தில் செபமாலை, பிரார்த்தனை ஓதி ஒப்புக்கொடுத்தனர். பின் அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்த, வாலிப அர்ச்சியசிஷ்டவரான, அர்ச். ஸ்ரனிஸ்லோஸின் திருச்சுரூபத்தை, ஆலயமணிகள் ஆர்ப்பரிக்க, செபத்துடனும், பாடல்களுடனும் சுற்றுப் பிரகாரமாகக் கோயிலைச்சுற்றிக் கொண்டுவந்தனர்.

தொடர்ந்து அர்ச். மிக்கேல் கல்லூரி அதிபர் வண. பி. எச். மில்லர்சுவாமி அவர்களால் திவ்விய நற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது. ஆசீர்வாதத்தின்பின் பங்குக்கட்டளைக்குரவர் வண. ஜீ. ஈ. எல். வம்பேக், சுவாமி அவர்களின் விடுதியில் இச்சபையினரால் ஓர் சிறு குளிர்பான விருந்து நடாத்தப்பட்டது.

அவ்வேளை கட்டளைக்குரவர், இவ் வாலிப அர்ச்சியசிஷ்டவர்தாமே கூறியவார்த்தைகளாகிய "நான் பெருங் காரியங்களைச் செய்யப்பிறந்தேன்" என்னும் தலைப்பில் இவ் அர்ச்சியசிஷ்டவர்பற்றியும், அவர் ஆற்றிய தொண்டுகள்பற்றியும், இச்சபையினருக்கு ஒரு சிறு சொற்பொழிவு ஆற்றினார். ஈற்றில், கட்டளைக்குரவர் ஆசிருடன் திருநாளை இவ்வாலிபப் பத்திச் சபையினர் இனிதே முடித்தனர்.

—நிருபர்.

—※—

### நீர்கொழும்பு அர்ச். மரியாயின் கல்லூரியில்

## தமிழ்மாணவர் தேர்ச்சிக்கழக வருடாந்தவிழா

நீர்கொழும்பு அர்ச். மரியாயின் கல்லூரிச் சிரேஷ்டமாணவர் தேர்ச்சிக் கழகவருடாந்த விழாக்கொண்டாட்டம் 11-11-61-ல் வண. பிதா டி. மேவின் வீரக்கொடி றெக்ரர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டு, கழகத் தலைவர் வி. எஸ். அந்தோனிப்பிள்ளை ஆசிரியரவர்களின் ஆரம்பஉரையுடன் ஆரம்பமானது.

திரு. பிறஞ்சீஸ் ஜோண் லவுறேந்தி பெர்ணாண்டோ ஆசிரியர் விழாவுக்குத் தலைமைதாங்கினார். கழகச் செயலாளரால் வருடாந்த அறிக்கை வாசிக்கப்பட்டது.

வண. பிதா சவிரிமுத்து, திரு. எஸ். பி. செல்வரத்தினம் சேவையில் இளைப்பாறும் அதிபர், திரு. எஸ். ஏ. சாமி இளங்கோவன், திரு. பெ. சோமாஸ்கந்தர் ஆசிரியர் ஆகியோர் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

விழாவில்நடன, நாடகங்களும், பேச்சுப்போட்டி, பொதுஅறிவுப் போட்டிகளும் இடம்பெற்றன. நீர்கொழும்பு வட்டாரத் தமிழ்ப்பாடசாலைகள் அவற்றில் பங்கெடுத்துக் கொண்டன. அப்பாடசாலைகள் பின்வருமாறு:

1. அர்ச். மரியாயின் கல்லூரி நீர்கொழும்பு, அர்ச். மரியாயின் தமிழ்ப் பெண்பாடசாலை நீர்கொழும்பு, கடற்கரைத்தெரு றோ. கத். தமிழ்ப் பெண் பாடசாலை நீர்கொழும்பு, துவண. றோ. கத். தமிழ்க்கலவன் பாடசாலை, மணற்சேனை றோ. கத். தமிழ்க்கலவன் பாடசாலை.

**நாடக நடனங்கள் :**

1. மணிப்புரி நடனம் கடற்கரைத் தெரு பெண்பாடசாலை.
2. மங்கையர் நடனம். மணற்சேனை கலவன் பாடசாலை.
3. மலர் நடனம். அர்ச். மரியாயின் பெண்பாடசாலை.
4. வீரசங்கம் நாடகம். அர்ச். மரியாயின்கல்லூரி.
5. வாழத் தெரியாதவன் நகைச்சுவை நாடகம் அர்ச். மரியாயின்கல்லூரி.

**பேச்சுப்போட்டியில் வெற்றிபெற்று பரிசுபெற்றவர்கள்**

முதலாவது பரிசு—யூகானியா, அர்ச். மரியாயின் பெண்பாடசாலை.

இரண்டாவது பரிசு—சிவலிங்கம், மணற்சேனை கலவன் பாடசாலை.
மானெல் பெர்ணாண்டோ, அர்ச். மரியாயின் பெண்பாடசாலை.

மூன்றும் பரிசு—கலில்டா லெம்பட். துவண கலவன் பாடசாலை.

பொதுஅறிவுப் போட்டி அர்ச். மரியாயின் கல்லூரி மாணவர் ஸ்ரீ கிருஷ்ணநாதன், தார்சியஸ் பெர்ணாண்டோ, யோசவ் மேவின், இரத்தினம், அந்தோனி ஆகியவர்களுக்கும், அர்ச். மரியாயின் பெண்பாடசாலை மாணவிகள், ருத் ஜோசப்பின், லிப்ஞ மரியராணி, சரோஜினிதேவி, யூகானியா, இராஜேஸ்வரி ஆகியவர்களுக்கும் இடையில் நடைபெற்றது. இப்போட்டியில் அர்ச். மரியாயின் கல்லூரி மேலதிகமான ஒரு புள்ளியால் வெற்றிபெற்றது. ஆயினும் இரு பாடசாலைகளும் கடைசிவரையும் சமத்துவ நிலையிலிருந்து வெகு கெட்டித்தனமாய்ப் போட்டி இட்டன, இப்போட்டியைப் பிறஞ்சீஸ் ஜோண் லவுறேந்தி பெர்ணாண்டோ நடுவராயிருந்து நடத்தலாயினர்.

**பேச்சுப்போட்டி நடுவர்களாகக் கீழ்க்கண்டவர்கள் கடமையாற்றினர் :**

1. திரு. எஸ். பி. செல்வரத்தினம். 2. செல்வி கார்த்திகேயன். 3. சாமி இளங்கோவன், கடைசியாய் விழாத் தலைவர் பி. ஜோ. லவுறேந்தி பெர்ணாண்டோ ஆசிரியர் நன்றியுரையுடனும், பாப்பரசர் வாழ்த்துப்பாவுடனும் விழா முடிவெய்தியது.

---

சீவியத்தின் எந்நிலையும் அததற்குரிய ஆபத்தைக் கொண்டுள்ளது. ஆயினும், வாலிபவயசுதான் ஒருவனை அதன்வலையிற் சிக்குண்ணப் பண்ணுவது. நற்குணங்களை மனதிற் பதிக்கும் ..... இதுவே.

### கல்கமுவா கத்தோலிக்க பாடசாலையில்

## பெற்றூர்-ஆசிரியர் சங்கக்கூட்டம்

"கலை, கலாசாரம், நாகரீகம், பண்பாடுஎன்பவற்றில் தலைசிறந்துவிளங்கியவர்கள் பண்டைத் தமிழ்மக்கள். இத்தகைய தமிழ்ப்பெருங்குடியிலேயே பிறந்து வளர்ந்து குருநாகல் பெரும் பிரிவிலே நான்கு நூற்றாண்டுகளாகத் தனிப்பெரும் புகழோடு வாழ்ந்துவரும் தமிழ்ப் பெற்றூர்களாகிய இக்கிராம வாசிகள் தங்கள குழந்தைகட்குத் தாய் மொழிக் கல்வியோடு தொழிற்கல்வியையும் தாராளமாய் ஊட்டவேண்டியது அத்தியாவசியமாகும். சமுதாய ஒற்றுமைக்காக அரசகருமமொழியும், உலகப்பொது மொழியாகிய ஆங்கிலமும் ஓரளவு கற்பிக்கப்படவேண்டியது இன்றியமையாததாகும்."

இவ்வாறு இம்மாதம் 5-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை கல்கமுவா றோ. க. தமிழ்க்கலவன் பாடசாலையில் காலை 9 மணிக்கு நடந்த பெற்றூர்—ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசிய பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. வீ. எஸ். பிள்ளையவர்கள் குறிப்பிட்டார்கள்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் "ஆசிரியர்கள் பாடசாலையில் ஐந்து மணித்தியாலங்கள் மட்டுமே அறிவொழுக்கங்களைக் கற்பிக்கின்றனர். எஞ்சிய பத்தொன்பது மணித்தியாலங்களிலும் மாணவர்களின் கல்வி அபிவிருத்தி, நற்பழக்க வழக்கங்கள், தொழில் முயற்சிகள் ஆகியவற்றிற்கு உற்சாகமளித்து முன்னேற்ற வேண்டியது பெற்றூர் தம் பெருங்கடனாகும். மாணவர்களின் வருங்கால வாழ்வு சீரும் சிறப்புமடைய வேண்டுமானால் பெற்றூரும் ஆசிரியரும் ஒத்துழைத்து அவர்கள் கல்வி அபிவிருத்திக்கும், சன்மார்க்கத்திற்கும் வழிகாட்ட வேண்டியது அத்தியாவசியம்" என்று குறிப்பிட்டார்.

அடுத்துப் பேசிய ஆசிரியர் திரு. டபிள்யு. எவ். அலெக்சாண்டர் லோவ் அவர்கள் "சூழவாவுள்ள குடியேற்றப் பகுதிகள் நன்கு முன்னேற்றமடையும் அதே சந்தர்ப்பத்தில் பழம் பெரும் கிராமமாகிய இவ்வூர் மட்டும் பிற்போக்கான நிலையிலிருப்பது வருத்தத்திற்குரியதாகும். கிராம முன்னேற்றச்சங்கம், சனசமூகநிலையம், கூட்டுறவுச்சங்கம ஆகியசம் பொது சனஸ்தாபனங்களை நிறுவி அவற்றின் மூலம் வாலிபர் இக்கிராமத்தின் முன்னேற்றத் திற்கான முயற்சிகளில் அவசியம் ஈடுபடவேண்டும்" என்று குறிப்பிட்டார்.

பின்னர் ஆசிரியை ஸ்ரீமதி ஜேட்றூட் அம்மா நிகழ்த்திய சொற்பொழிவில "பிள்ளைகளின் நல்வாழ்வில் முக்கியமாகக் கவனஞ்செலுத்தவேண்டியவர்கள் தாய்மாரே. அவர்கள் வீட்டிலே குழந்தைகட்கு நற்பழக்க வழக்கங்களைப் பயிற்றுவதிலும், ஓய்வான நேரங்களில் பெண்பிள்ளைகட்குத் தையல்வேலை, பின்னல்வேலை, சமையல்வேலை என்பவற்றைக் கற்பிப்பதிலும் சிரத்தையெடுக்க வேண்டுமென்றும்" குறிப்பிட்டார்.

கடவுள்வணக்கம், தமிழ்மொழி வாழ்த்துப்பாடல் ஆகியவற்றுடன் ஆரம்பிக்கப்பட்ட இக்கூட்டத்தில் மாணவரின் சங்கித, நடன நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

பின்னர் நடைபெற்ற பெற்றூர்—ஆசிரியர்சங்க உத்தியோகஸ்தர் தேர்தலில் தலைமைஆசிரியர் திரு. வீ. எஸ். பிள்ளையவர்கள் தலைவராகவும், கமவிதானையார் திரு. எம். சந்தியாகுப்பிள்ளை அவர்கள் உபதலைவராகவும், ஆசிரியர் திரு. டபிள்யு. சி. அலெக்சாண்டர் லோவ் அவர்கள் செயலாளராகவும், ஆசிரியை ஸ்ரீமதி ஜேட்றூட் அம்மா அவர்கள் தனாதிகாரியாகவும், திருவாளர்களான அ. சந்தியாகுப்பிள்ளை, ம. அருளப்பு, சீ. செபஸ்தியாம்பிள்ளை, வ். பெஞ்சமின், ஜே. லுவீஸ்பிள்ளை ஆதியோர் நிர்வாகசபை உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பாடசாலையின் அபிவிருத்தியை முன்னிட்டுக் கல்விப் பகுதியார்க்குச் சமர்ப்பிப்பதற்கான பலமுக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னர், சிற்றுண்டியுபசாரணையுடனும், செல்வி ம. விக்றோறியாவின் நன்றியுரையுடனும், தேசியகீதத்துடனும் பகல் 12 மணிக்குக் கூட்டம் சுபமே முடிவெய்தியது.

—நிருபர்.

—( )—

### கொழும்பு சஞ்சூசையப்பர் கல்லூரியில் கத்தோலிக்க மாணவர்மன்ற

## வருடாந்த கூட்டம்

### "கிறிஸ்தவம் ஓர் அந்நியமதமன்று"— கல்லூரி அதிபர்

"விஞ்ஞான உண்மையாயினும், சமயஉண்மையாயினும், அது ஐரோப்பாவுக்கோ, அன்றேல் ஆசியாவுக்கோ மாத்திரம்சொந்தமானதன்று. அது அகில உலகுக்கும் பொதுவானதே" இவ்வாறு கொழும்பு சஞ்சூசையப்பர் கல்லூரிஅதிபரான அதிவண. டபிள்யு. எல். ஏ. டொண்பீற்றர் சுவாமிகள் கத்தோலிக்க மாணவர் மன்றத்தினது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பேசியபோது குறிப்பிட்டார்.

"தொடர்ந்து பேசுகையில் புத்தசமயம் இத்தேசத்துக்குச் சொந்தமான சமயம் என்று கருதப்படும் அதே நேரத்தில், கிறிஸ்தவம், ஒரு அந்நிய மதமாகவும், ஐரோப்பியமதமாகவும், அது எமது தேசத்துக்கே அந்நியமதம் எனவும்பொதுவாகக்கருதப்படுகின்றது. எமது நாட்டுக்கலாசாரத்தோடு இன்னும் இரண்டறக்கலக்காத காரணத்தினாலேயே அது ஓர் அந்நிய சமயம் எனக் கருதப்படுகின்றது" என்று கூறினார்.

பௌத்தசமயமும், கிறிஸ்தவசமயமும் எவ்வாறு இந்நாட்டுக்கு கொண்டுவரப்பட்டன என்றசரித்திரங்களை எடுத்துக்காட்டாகவைத்தே இவ்வாறு குறிப்பிட்டார்.

"கிறிஸ்தவம் இந்நாட்டிலே பல இன்னல்கள் மத்தியிலே போதிக்கப்பட்டது. அதன்வருகை கஷ்டங்கள் பலவற்றை ஏற்கவேண்டியிருந்தது. அவ்வாறன சந்தர்ப்பங்கள் தவிர்க்கமுடியாதனவாயிருந்தன. இந்நாட்டில் இருந்த தடைகளும், கஷ்டங்களும், கிறிஸ்தவத்தின் உண்மையான விசுவாசப் பரப்புதலுக்கு முட்டுக்கட்டைகளாயின. தொடர்ந்து அவர் பேசுகையில், "உலகத்தில் முக்கியமான இந்து, பௌத்தம், இஸ்லாம் ஆதியாம் சமயங்களைப்போன்று கிறிஸ்துசமயமும் ஆசியாவிலேயே உற்பத்தியாகியது. ஆனால், ஐரோப்பிய நாகரீகத்திலேதான் அது ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் புகுத்தப்பட்டது.

(தொடர்ச்சி 5-ம்பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச்செய்திகள்

## உதவிக் கல்விமந்திரி உரைக்கின்றார்

"எட்டையும், ஐந்தையும் சரியாகக் கூட்டத்தெரியாத எஸ். எஸ். சி. படித்த சிலருக்கு ஆசிரியவேலை கொடுக்கப்பட்டதை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம்; வேலைகோரிப் பெயர்களைப் பதிவுசெய்த அடிப்படையிலேயே இந்த நியமனங்கள் செய்யப்பட்டன; படிப்பிப்பதற்குரிய தகுதிகண்டு இவர்களுக்கு வேலை கொடுக்கப்படவில்லை; இதுபோன்ற நியமனங்கள் இனிவருங் காலத்தில் செய்யப்படமாட்டா" எனச் சென்ற 15-ந் திகதியன்று இரத்தினபுரியைச் சேர்ந்த இலிமலே அரசினர் பாடசாலைப் பரிசளிப்புவிழாவில் பேசியபோது உதவிக் கல்விமந்திரி திரு. வி. ரி. ஜி. கருணரத்ன தெரிவித்திருக்கின்றார்.

## யாழ்ப்பாண மேயரின் வேண்டுகோள்

"தமிழ்மக்களது பாரம்பரியத்தின் பெருமைக்கும், எதிர்கால வளர்ச்சிக்கும் பொருந்தக்கூடிய ஒரு நூல் நிலையத்தை அமைக்கவேண்டுமென்பது யாழ்ப்பாண நூல்நிலையத்தை ஆரம்பித்துவைத்தவர்களின் பெருநோக்கமாகும். ஒருநாட்டு மக்களின் பண்பாடு, நாகரீகம், கல்வி, சமயம், கலை ஆதியன வளர்ச்சிபெறுவதற்கு நூல்நிலையம் இன்றியமையாதது. ஈழத் தமிழரின் தலைநகரான யாழ்ப்பாணத்திலே இவற்றைப் பாதுகாத்துவளர்க்க ஒரு சிறந்த நூல்நிலையம் அமைத்தல் மிக அவசியம்." இவ்வாறு யாழ்ப்பாணப் பொதுசன நூல்நிலையக் கொடித்தினம்சம்பந்தமாகப் பொதுமக்களுக்கு விடுத்திருக்கும் வேண்டுகோள்ஒன்றில் மேயர் ரி. எஸ். துரைராசா அவர்கள் தெரிவித்திருக்கின்றார்.

## றெயின் - வான் விபத்து

காலியை நோக்கிச் சென்ற வியாழக்கிழமை இரவு 11 மணி வரையிலே போய்க்கொண்டிருந்த றெயின்வண்டி ஒன்று அகுங்கல எனுமிடத்திலுள்ள பாதுகாப்பற்ற ஒரு றெயில்வேக்கடவையில் வான் ஒன்றுடன் மோதியதன் விளைவாக வானில்சென்றபதின்மூன்று பேரிலும் எம். ஜினதாசா (வயது 30), பி. எச். தேமிஸ் (வயது 45), எஸ். எக்மன் டி சில்வா (வயது 42) எனும் மூவரும் மரணமடைந்தனர். ஏனைய பதின்மரும் பலத்தகாயங்களுக்குள்ளாயினர். வான் எஞ்ஜினுக்கடியிலே அகப்பட்டுச் சுக்குநூறாக நொருங்கியது. காயமடைந்த பதின்மரிலும் மூவரின்நிலைமை மிகமோசமாயிருந்ததால் இவர்கள் பலப்பிட்டி ஆஸ்பத்திரியிலிருந்து காலி ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள். வான் சாரதியும் மரணமடைந்ததாகச் சொல்லப்படுகிறது.

## கல்விப் பகுதியின் உத்தரவுகள்

பதினைந்து வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள், மாணவிகள் சகலரும், ஆசிரியர்களும் மாதத்திலே குறைந்தபட்சம் ஒருநாளாவது கிராம சமூகத்திட்ட வேலைகளில் கட்டாயமாகக் கலந்துகொள்ள வேண்டுமென்று கல்விப்பகுதி உத்தரவு பிறப்பித்திருக்கிறது. இன்னும் ஆரம்ப பாடசாலைகளிலே அனுமதிப்பரீட்சை நடைபெறமாட்டாது. எல்லாப்பாடசாலைகளும் அந்தந்தப் பாடசாலைகளுக்குச் சமீபமாகவசிக்கும் பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ளுமாறு உத்தரவிடப்படும். அவ்விதம் செய்து எந்தப் பாடசாலையிலாவது பிள்ளைகளுக்கு இடவசதி போதாதென்று கண்டால் அப்பாடசாலையில்பிற்பகல்வகுப்பு நடத்தப்படும்.

## தமிழ்க் காங்கிரஸின் தீவிர முயற்சி

சிங்கள அறிவுபெற்ற அரசாங்கஊழியரையே வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மாற்றுவதெனறும், சிங்கள அறிவு பெற்றிராவிடின் 55 வயதுக்கு மேற்பட்டவர்களின் சேவைகாலத்தை நீடிப்பதில்லையென்றும் அரசாங்கம் செய்த முடிவைப்பற்றியும், சிங்களத்தைச் சகலபாடசாலைகளிலும் கட்டாய பாடமாக்க வேண்டுமென்று தேசிய கல்விக்கமிஷன் செய்த சிபாரிசு பற்றியும் அகில-இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களும், காங்கிரஸ் கொழும்புக் கிளைத் தலைவர், உபதலைவரும் விரைவிலே பிரதமரையும், சம்பந்தப்பட்ட மந்திரிகளையும் சந்தித்துப்பேசித் தேசிய ஒற்றுமைகருதி முன்சொன்ன இரு முடிவுகளையும் மீண்டும் பரிசீலனை செய்யவேண்டுமென்றும், தேசிய கல்விக்கமிஷனின் சிபாரிசை நிராகரிக்க வேண்டுமென்றும் கேட்கவிருப்பதாகத் தெரியவருகிறது.

## கோடீஸ்வரர் இல்லை

இலங்கையிலே 'கோடீஸ்வரர் எவருமேயில்லை; சென்றவருடத்தில் பத்து இலட்சம் ரூபாவுக்குமேல் சம்பாதித்தவர் இல்லை; ஒருவர்மட்டும் ஏறக்குறையப் பத்துஇலட்சம்ரூபா சம்பாதித்தாரென்று வருமானவரிப்பகுதித் தலைவரின் அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஒருவரும் முதலீடுகள் மூலமே 8 இலட்சத்து 73 ஆயிரத்து 847 ரூபா சம்பாதித்தாராம்.

## தமிழர் - சிங்களவர் ஒற்றுமை

"நான் பதவியிலிருக்கிறகாலத்திலே இந்நாட்டிலுள்ள இருபெரிய இனங்களான சிங்கள-தமிழ்மக்களுக்கிடையே ஒற்றுமையும், நல்லெண்ணமும் நிலவச்செய்ய என்னால் செய்யக்கூடிய எல்லாவற்றையும் செய்வேன்; சிங்கள - தமிழ் மக்களுக்கிடையிலே இன்று வேற்றுமைகள் இருப்பதற்குக் காரணம், அரசியல்வாதிகளாகிய நாங்கள்தான்" என்று சென்ற வெள்ளிக்கிழமைபிற்பகல் கொழும்பிலே இலங்கைக் கலைக்கழகத்தின் தமிழ் நாடகக் குழுவால் நடத்தப்பட்ட நாடகவிழாவை ஆரம்பித்துவைத்துத் தமிழில் பேசிய கலாசார மந்திரி திரு. மைத்திரிபாலா சேனநாயக்கா கூறியிருக்கின்றார்.

## சட்டமும் சமயபாதுகாப்பும்

நாட்டின் சமயகாரியங்களுக்கு அரசாங்கம் ஓர் அச்சுறுத்தலாகிவிட்டது; சட்டத்தைக்கொண்டு சமயத்தைப் பாதுகாப்பது முடியாத காரியமென்பதை உய்த்துணர்வது அரசாங்கத்துக்குப் புத்தியான ஒரு செயலாகும்; சமயகாரியங்களில் அரசாங்கம் தலையிடக்கூடாது; அவற்றைப் புத்த குருமாரோடும், புத்த மக்களோடும் விட்டுவிடவேண்டுமென்று வித்தியாலங்கார சர்வகலாசாலைப் பேராசிரியர் கனம். ஸ்ரீசீவாலி தேரோ அன்று திங்கட்கிழமை மகாறகாமாவிலுள்ள புத்த பிக்குகள் ஸ்தாபனத்தில் பேசியிருக்கின்றார்.

## பணிஸுக்கு அரைச்சதம்

மாவின் விலை ஏற்றப்பட்டதிலிருந்து பாடசாலை மாணவர்களின் மதியப் போசனத்துக்காகக் கொடுபட்டுவரும் பணிஸ்கள் அளவிலே சிறுத்துப்போய்விட்டதாகப் பாடசாலைகளின் அதிபர்களும், தலைமை ஆசிரியர்களும் கல்விப் பகுதிக்கு முறையீடு செய்துகொண்டதின்பேரிலே கல்விமந்திரி பணிஸ்கள் உதவிவருகின்ற றொட்டிச்சாலைகளின் சொந்தக்காரருக்குப் பணிஸ்ஒன்றுக்கு அரைச்சதம் கூட்டிக்கொடுக்கத் தீர்மானித்திருக்கிறார். இவ்விதம் அரைச்சதவீதம் கூட்டிக்கொடுப்பதாலே மேலதிகமாக 1,66,000 ரூபா செலவேற்படுமென மதிப்பிடப்படுகிறது. இதுவரை கல்விப்பகுதி இரண்டு அவுன்ஸ் பணிஸ் ஒன்றுக்கு இரண்டரைச் சதவீதம் உதவிவந்தது. ஆகவே, இனிமேல் மூன்றுசதம் உதவிவரும். மாவின்விலை சென்றஆவணிமாதம் இறுத்தல் ஒன்றுக்கு ஐந்துசதவீதம் ஏற்றப்படலாயிற்று.

## இராசிநாமாச் செய்கின்றார்

கொழும்பு மாநகரசபையிலே கொச்சிக்கடை தெற்கு வட்டார அங்கத்தவரும், ஐக்கியதேசியகட்சியைச் சேர்ந்தவருமான திருமதி அய்ஷா றூவ் தனது பதவியை இராசிநாமாச் செய்யத் தீர்மானித்துள்ளார். கொழும்பிலுள்ள முஸ்லீம் மகளிர் கல்லூரியின் தலைவிஇவரே. இந்தக் கல்லூரியைத் தற்போது அரசாங்கம்எடுத்துக்கொண்டது. அதனால், அரசியலைத் துறப்பதா? தலைமைப்பதவியைத் துறப்பதா? என்ற பிரச்சினை பிறந்து, அக்கல்லூரியுடன் நெடுங்காலம் தொடர்புகொண்டிருந்ததையிட்டும், தான்சேர்ந்துள்ள முஸ்லீம்சமூகத்தின் நலனை முன்னிட்டும் கல்லூரித் தலைமைப் பதவியைத் தொடர்ந்து வகிக்க நினைந்து இவர் மாநகரசபை அங்கத்துவபதவியை இராசிநாமாச்செய்யத் தீர்மானித்திருக்கின்றார்.

## சாராயமும் தவறணைகளும்

சாராயம் ஒருபோத்தல் விலை எட்டு ரூபாவாகக் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து தங்கள் பகுதிகளிலே சாராயத்தவறணைகளைக் கொண்டிருக்க அனுமதி வழங்குமாறு சுமார் 200 தலதாபன சபைகளும், சங்கங்களும் உள்நாட்டுமந்திரி காரியாலயத்துக்கு மனுப்பண்ணியிருக்கின்றன. அதனால், அவற்றின் மனுக்களுக்கு அனுமதியளிக்கும் விஷயமாய் உள்நாட்டு மந்திரி மதுபரிபாலன அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், மனுப்பண்ணியுள்ள பட்டினசபைகள், கிராமச்சங்கங்களின் பிரதிநிதிகளைக்கொண்ட ஒரு மகாநாட்டைக் கூட்டவிருக்கின்றார்.

## விசாரணை வேண்டுகோள்

வல்வெட்டித்துறைத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம்பற்றி விசாரணை நடத்தவேண்டுமெனச் சென்ற வெள்ளிக்கிழமை கூடிய சனப்பிரதிநிதிகள் சபையில் திரு. லெஸ்லி குணவர்த்தன கேட்டிருக்கின்றார். அவ்வேளை டக்றர் ஈ. எம். வி. நாகநாதன் அவர்கள் பேசியபோது, துப்பாக்கிச்சூட்டு வரலாற்றை எடுத்துக்கூறினார். இச்சம்பவம் தற்போது நீதிபதியால் விசாரணை செய்யப்படுகிறதென்றும், அதனால் இப்போது எந்த அறிக்கையையும் விடத் தான் விரும்பவில்லையென்றும் நீதிமந்திரி பதிலிறுத்தபோது தெரிவிக்கலாயினர்.

## 15 முதல் 20 வருடம்

இரத்தினபுரியைச்சேர்ந்த கலவானை மகாவித்தியாலயத்திலே தொழிற்சாலை ஒன்றுக்கு அத்திவாரக்கல் நாட்டும்போது நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கல்விமந்திரி பேசியபோது: தேசிய கல்வித்திட்டம் கம்பளையிலே ஆரம்பமாகும்; இத்திட்டத்தின் பலன்களைப் பெறப் 15 முதல் 20 வருடங்கள் செல்லும்; நான் ஒரு ஆசிரியனாக இருந்தபோது நாள்ஒன்றுக்கு இருபதுமணித்தியாலம் வேலைசெய்தேன்; அரசாங்க மொழியாகச் சிங்களத்தை ஆக்க வேண்டுமென்று முந்த ஆலோசனை கூறியவர்களில் நானும் ஒருவன் எனக் கூறலாயினர்.

## வெளிநாட்டுச் செய்திகள்

● சோவியற் பிரதமர் குருஷேவ் சமீபத்தில் இரு இராட்சத அணுக்குண்டுகளை வெடிக்கவைத்தது, மனித குலத்தின் சரித்திரத்திலே இதுவரை கண்டும், கேட்டுமிராத அத்துணை மிலேச்சத்தனமான கொடுஞ்செயலென்று குறிப்பிட்டுத் திரு. சி. இராசகோபாலாச்சாரியார் எழுதிய கடிதம் ஒன்று 'நியூயோக் ரைம்ஸ்' பத்திரிகையில் வெளிவந்துள்ளது.

● பேர்ளின் நெருக்கடியைத் தீர்த்துவைப்பதற்கான ஒரு உடன்படிக்கையைச் செய்வதற்கு வேண்டிய முன்னேற்றம் காணப்படுவதாகத் தாம் எண்ணுவதாயும், பொதுவாகச் சூழ்நிலை சீர்திருந்தியிருப்பதாயும் பிரித்தானியபிரதமர் திரு. மைக்மிலன் அதன் பாராளுமன்றத்திலே சென்ற 1-ந் திகதியன்று தெரிவித்திருக்கின்றார்.

● அணு ஆயுதங்களைப் பாவிப்பது மனிதசமுதாயத்தின்மீதும், நாகரீகத்தின்மீதும் இழைக்கப்படும் படுபாதகச் செயல்; ஆகவே, அவற்றை உபயோகிப்பதை முற்றாகத்தடுக்க ஒரு சர்வதேச சட்டம் இயற்றப்பட வேண்டுமெனக் கோரும் பிரேரணை ஒன்று ஐக்கியநாடுகளின் ஸ்தாபனத்திலே சகலஅங்கத்தவர்களையும் கொண்ட பிரதான அரசியல் கமிற்றியில் சென்ற 15-ந் திகதியன்று நிறைவேறியிருக்கிறது.

● நூறு மெகாதொன்வரை நிறையுள்ள அணுக்குண்டுகள், சலவாயுக் குண்டுகளைச் செய்து ருஷியா சேமித்து வைத்திருக்கிறதென்று சோவியற் றொக்கெற்நிபுணர் ஜெனறல் வி. எவ். தொலுப்கோ 'சிவப்புநட்சத்திரம்' என்ற பத்திரிகையில் எழுதி, இதையிட்டு அமெரிக்காவிலுள்ள எவரும் சந்தேகம்கொள்ள வேண்டாமென்றும் தெரிவித்திருக்கின்றார்.

● ருஷியா வருகிற தைமாதம்வரையிலே ஒரு மனிதனுடன்கூடிய ஆகாயவெளிக் கப்பல் ஒன்றை அனுப்பத்திட்டமிடுவதாக மஸ்கோவிலிருந்து செய்தி பரந்திருக்கிறது. இது சந்திரனைச் சுற்றிக்கொண்டு ஐந்துநாட்களாகச் சந்திரமண்டலப் பிரயாணஞ் செய்துவிட்டுத் திரும்பவும் பூமியில் வந்து சேருமாம்.

● சீர்க்காய் — அதாவது சீயக்காயானது கெட்டஇரத்தத்தைச் சுத்தப்படுத்தவும், சர்மவியாதிகளைப் போக்கவும் சிறந்த மருந்துச்சத்துள்ள ஒருபொருளென்று புதுடில்லி நகரிலே ஆயுர்வேத ஆராய்ச்சிச் சபை கண்டுபிடித்திருக்கிறதாம். சீயக்காயிலிருந்து இரத்தசுத்தி செய்யக்கூடிய ஒருவகை வாயு இருப்பதாயும் அது கண்டறிந்து அதனை உற்பத்திசெய்துள்ளதாம்.

## அரசியலமைப்புத்திருத்தம்

இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பைத் திருத்தியமைக்கும் கூட்டுக் கமிற்றியில் பாராளுமன்றத்தின் இருசபைகளையும்சேர்ந்த அங்கத்தவர்களாய் 24 பேர் இருக்கவேண்டுமென்றும், இவர்களிலே 15 பேர் சனப்பிரதிநிதிகள்சபை அங்கத்தவர்களாய் இருக்கவேண்டுமென்றும் சென்ற சனிக்கிழமை சபாநாயகரும், பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் கூடித் தீர்மானித்துள்ளனர். சனப்பிரதிநிதிகள் சபையிலிருந்து தெரியப்படுகிறவர்களிலே எட்டுப்பேர் அரசாங்க கட்சியையும், ஏழுபேர் எதிர்க்கட்சிகளையும் சேர்ந்தவர்களாய் இருப்பர். திரு. டட்லி சேனநாயக்கா, திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், டக்றர் ஈ. எம். வி. நாகநாதன், டக்றர் என். எம். பெரேரா, திரு. பீற்றர் கெனமன், திரு. பிலிப் குணவர்த்தன என்பவர்களே எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த எழுவருமாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### கார்த்திகை மாதம் — 1961

| | | | | |
|---|---|---|---|---|
| 26 | ஞா | 2 | பெந்தேக்கோஸ்தின் பின்வரும் (கடைசி) 27-ம் ஞாயிறு (வி. ம.) | ப. |
| 27 | தி | ம | காலதினம் (ஞாயிறு பூசை) ... | ப. |
| 28 | செ | ம | காலதினம் ( ,, ,, ) ... | ப. |
| 29 | பு | ம | காலதினம் ( ,, ,, ) அர்ச். சத்தூர்னீனுஸ் ஞா. | ப. |
| 30 | வி | 2 | அர்ச். பெலவேந்திரர், அ. (வி. ம.) ... | சி. |

### மார்கழி மாதம் — 1961

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | வெ | யே. | காலதினம் (ஞாயிறு பூசை) ... | ப. |
| 2 | ச | மா. | அர்ச். பிபியானா ... ... | சி. |

சத்திய வேத
பாதுகாவலன்

1961-ம் ஆண்டு
கார்த்திகைமாதம்25 -ந்திகதி

## தமிழரும் பொருளாதாரமும்

இன்று தமிழ்மக்கள் ஒன்றுகூடும் சந்தர்ப்பங்களிலெல்லாம் அரசியற் தலைவர்களினதும், சமூகப் பெரியார்களினதும் வாயிலிருந்து அதிகமாக வருவது பொருளாதாரம் என்பது தான். ஊக்கமாகப் பாடுபட்டுப் பொருளைத்தேடுவதிலும், அதனைப் பக்குவமாகப் பேணுவதிலும், சிக்கனமாகச் செலவழிப்பதிலும் தமிழ் மக்கள் அதிகம்விழிப்பாயிருந்து தங்கள்பொருளாதாரத்தை விருத்தி செய்ய வேண்டுமென்பதே அவர்களின் தணியாத வாஞ்சையாகும். பொருளாதாரத்திலே நாம் பின்தங்கியமைக்கும், நமது எதிர்காலத்தின் நிச்சயமற்றதன்மைக்கும் காரணம், இதுவரை அரசாங்க உத்தியோகமே எமதுஇலட்சியமாக அமைந்திருந்தமைதான். அந்தநிலைமை இப்போது மாறிவிட்டது. அதனால் தற்போதைய நிலைமையையுணர்ந்து நமது இலட்சியத்தை மாற்றியமைக்க வேண்டும். அரசாங்க உத்தியோகங்களையும், அரசாங்கத்தையும் நம்பியிராது எமது சொந்த முயற்சிகளில்ஈடுபடவேண்டும். ஆம், நமது எதிர்கால நலன்கருதிப் பல்வேறு தொழில்துறைகளிலும் நம்முடைய கவனத்தைத் திருப்புவதே நலமாகும். அதனால் தொழிற்கல்வி பயில்வதில் நமது இளைஞர்களை ஊக்கப்படுத்துவதே இன்று நாம் செய்யவேண்டிய இன்றியமையாத ஒருகாரியமாகும்.

அன்று தமிழ்ப்பெரும் தலைவர்களிலொருவர் பேசியபோது: "தமிழ்ப்பேசும்மக்களின் ஒரு புதிய திருப்பத்திலே எதிர்காலத்தில் பயன்படுத்தப்படவேண்டும்; தொழில்துறைகளை அபிவிருத்தி செய்வதன்மூலமே தமிழ்மக்கள் இனிமேல் வாழமுடியும்; கடின உழைப்புமூலமே எதிர்காலத் தமிழ் இளைஞர்கள் தமதுவாழ்க்கைப்பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளமுடியும்; படித்தவாலிபர்கள் ஆர்வத்துடன் பலதொழில்களிலும் ஈடுபடுவதினால்தான் பிறநாடுகள் தொழில் விருத்தியடைந்து வருகின்றன; அவர்களை நமது தமிழ்இளைஞர்களும் பின்பற்றவேண்டும்" எனக்கூறியிருக்கின்றார். "தொழில் நுட்பத் துறைகளிலே பிள்ளைகளை வழிநடத்துவதுடன் அமையாது அவர்களைச் சகல தொழில்துறைகளுக்கும் மதிப்புக்கொடுக்கக்கூடியவர்களாயும் ஆக்கிவரவேண்டும்; அப்போதுதான் நமதுஎதிர்காலம் வளமுடையதாயிருக்கும்; இயற்கை அன்னை எமக்குஅளிக்கும் வளங்களைப் பயன்படுத்திக் கொள்ளவிடில் நாம் பொருளாதாரத்துறையில் பின்தங்கியவர்களாவோம்; அதனால் உள்ளூர் மூலவளங்களை உபயோகித்து, உள்ளூர்த்தொழில்களை ஊக்குவிக்க வேண்டும்; தங்கள் ஓய்வுநேரங்களிலே மாதர்கள் நானாவித சிறு கைத்தொழில்களை மேற்கொள்வதன்மூலம் நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் சிறந்தசேவை ஆற்றலா" மென்று மற்றோர் இளந்தலைவர் கூறுகின்றார்.

நாட்டின்சனத்தொகை அதிகரித்துக்கொண்டே வருகிறது. ஆனால், சனத்தொகை அதிகரிப்பதுபோல அதன்நிலம் அதிகரிப்பதில்லை. அதனால் ஒருசிறுநிலமாவது, ஒரு அங்குலத்தரையாவது, எந்தமூலப் பொருளாவது வீணாகாமல் விவசாயிகளும், மற்றும் தொழிலாளிகளும் ஊக்கமாயுழைத்து அவற்றிலிருந்து அதிகபலனைப்பெற முயற்சியெடுக்க வேண்டும். வன்னிப்பகுதிகளிலே நீர்வளமற்ற பல கிராமங்களிலும் மழைகாலத்தை மக்கள் பயன்படுத்திக் காய்கறிமுதலாம் உணவுப்பயிர்களை உண்டுபண்ணுவதில் ஊக்கமெடுத்துவருவதைக் கவனித்திருக்கிறோம். அவர்களைக் கண்டுபாவித்து நமது பட்டினங்கள், கிராமங்களிலும் மழைகாலத்தில் மட்டுமல்ல, மறுகாலத்திலும் வீட்டுத்தோட்டங்களில் காய்கறிவகைகளை உண்டுபண்ணி அவற்றைப் பயன்படுத்துவதாலே வாழ்க்கைச்செலவைக் குறைத்துக்கொள்ளலாம். வீட்டுக்கு ஒருகோழி, ஒருஆடு, அன்றேல் ஒரு மாடுவளர்த்துப் பொருளாதாரத்தை விருத்திசெய்யுமாறு அன்றொருநாள் அரசாங்கத்தலைவர்ஒருவர் புத்திகற்பித்தார். ஆனால், இன்று எத்தனையோ வீடுகளிலே கோழிப்பண்ணைகள் இருந்துவருவதையும், பலகோழிகள் அவற்றிலே முறைப்படி வளர்க்கப்பட்டு வருவதையும் கண்டுவருகின்றோம். இவ்விதம் எல்லாவீடுகளிலுமே கோழிப்பண்ணைகள் இருந்துவரின் அவற்றின்மூலம் பொருளாதாரத்தைப் பெருக்கலாம். இன்னும் நாட்டின் பொருளாதாரம் அதிகரிக்கவேண்டுமானால் சுதேசி இயக்கத்தையும், நாட்டின் சுதேசிப்பொருட்களையும் எல்லோரும்ஆதரிக்கவேண்டும். நாம் சுதேசஆடைகளுக்கு மதிப்புக்கொடுத்து ஆதரவளிக்கும்போது சுதேச நெசவுதொழில் விருத்தியடையும். சுதேசநெசவு துணிகள் சிலவேளை பார்வைக்கு அழகற்றிருக்கலாம். அணிவதற்குப் பசுமையற்றிருக்கலாம். ஆனால், "குரங்குக்கும் தன் குட்டிபொன்குட்டி" என்பதை மனதிற்கொண்டு அவைகளைஉபயோகித்தால் நெசவுதொழிலில் ஈடுபட்டிருக்கும் எத்தனையோபேர் பிழைக்க வழிவகையேற்படும். பொதுவிலே தொழிலின் மகத்துவத்தை உணர்ந்து யாவரும்செயலாற்ற முற்படின் நாட்டைப் பொருளாதார வளமுடையதாக்கி விடலாமென்பதில் சந்தேகமில்லை.

ரோசாப்பூவானது தனது நிறத்தையும், வாசனையையும் வேரிலிருந்து பெற்றுக் கொள்ளுகின்றது. மனிதனோ இளம் பருவத்திலிருந்தே தனது நற்குணங்களையும், புண்ணியங்களையும் பெற்றுக்கொள்ளுகிறான்.

# இஸ்பிரீத்துசாந்து திருநாளுக்குப் பின்வரும் கடைசி ஞாயிறு.

— வண. மைக்கல் ரொட்ரிக்கோ சுவாமிகள் —

தமிழாக்கம்: தமிழ்க் கழகம், லங்காமாதா குருமடம், கண்டி.

இன்றைய திவ்விய பூசைப்பலியின் பொருள் உறுதியானதோர் பொருள். ஏனெனில், எல்லைகுறிக்கப்பட்டகாலத்திற்கும், நித்தியத்திற்கும் இடையிலுள்ள பாதையை அது எடுத்துக் காட்டுகின்றது.

### உலகமுடிவு

சாதாரண மொழியில் கூறப்போனால், எமது கிறீஸ்தவ சீவியம் ஓர் மகிமைச் சுவாலையில் முடிவுபெற வேண்டும்என்பதை இன்றைய பூசைப்பலி எடுத்துக்கூறுகிறது. மரணத்தின் போது கிறிஸ்து ஒவ்வொருவரிடமும் வருவார்; உலகம் முடியும்போது, அதாவது, கடைசித் தீர்வையின்போது அவர் எல்லோரிடமும் வருவார். இஸ்பிரீத்து சாந்துவானவரின் வருகைக்குப்பின் திருச்சபை பெற்ற நீண்டகால வளர்ச்சி எமது நம்பிக்கைகளை பூரணமடையச்செய்யும் தினமாகிய இந்தக் கடைசிஞாயிற்றுக்கிழமையிலே இவையே எமது சிந்தனைகளாக இருப்பது சாலப்பொருந்தும். இன்றைய வழிபாட்டின் கருத்து காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கவேண்டும். உலகம் முடிவடையும், அதுபோலவே, நான் கட்டி அரவணைத்து என் உடமையாக வைத்திருக்கும் சிங்காரப் பொருட்களும், அணிமணிகளும், பகட்டுகளும் நிறைந்த என் சிற்றுலகும் முடிவடையும். எனது எல்லா நம்பிக்கைகளும், ஆவல்களும், பூரணத்துவம் அடையவேண்டும்.

### செபமும் உபதேசமும் கொண்ட பகுதி

"இனிமையான யேசுவே, என் நடுவராக இராமல், என் இரட்சகராயிரும்" என்றதோர் பழையசெபம் இருக்கின்றது. அபிஷேகம் பண்ணப்பட்ட மீட்பர் என்ற கருத்துடைய, யேசுக்கிறிஸ்து என்னும் நாமம்பூண்ட அவரிடம், இந்தச்செபத்தால் அளவுக்குமீறி நாம் ஒன்றும் கேட்கவில்லை. ஏனெனில் யேசு என்பது மீட்பராகிய அவருடைய நாமம். பெத்லகேமின் குகையிலும் நசரேத்தூரிலும், கல்வாரிக் குன்றிலும் இரக்கம்நிறை இரட்சகராகவும், உணர்ச்சியூட்டும் வகையில் தன்னலந்துறந்த தியாகியாகவும் அவர் ஒருமுறை வந்தார். மறுபடியும் அவர் நீதிவழங்குபவராக வருவார் (வருகை = ஆகமனம்). ஆனால், தான்வெற்றிவாகைசூடியதையும், தன் இரட்சணிய அலுவலின் பூரணநோக்கத்தையும் நிரூபிக்க அவர் வருவாராதலால், நீதிமான்களின் ஆன்மாக்கள் அஞ்சவேண்டியதில்லை. அமைதியாக, ஒவ்வொருவருக்கும் அவரவரின் உரிமையை அளிக்கும் ஒருவராகக் கிறிஸ்துவை நோக்க வேண்டும். அவரின் சிந்தனைகள் துன்பத்தின் சிந்தனைகள் அல்ல; ஆனால் சமாதானத்தின் எண்ணங்கள் என "பிரவேசவாக்கியம்" கூறுகின்றது. "சபைச்செபம்" எமது கடமை உணர்ச்சியைத் "தூண்டுகிறது." எம்மைத் 'தூண்டுமாறு" நாம் இறைவனை வேண்டுகின்றோம். தூண்டுதல் என்னும் கருத்துடைய "எக்ஸ்சித்தா" (Excita) என்னும் லத்தீன்பதத்தை எதிர்வரும் ஆகமனகாலத்திற்குரிய செபங்களில் சாதாரணமாகக் காணலாம். நாம் அவரையே அதிகமாகத் தேடும்வண்ணம் அவர் எமது சித்தத்தைத் தூண்டுவாராக. எமது ஆன்மாவுக்குப் பிரமாணிக்கமுள்ளவர்களாக நாம் நடந்திருப்பின், எமது நம்பிக்கைக்குரிய இக்காலத்தை நாம் அவரின் விசுவாசிகள் எனப் பிரகடனப் படுத்துவதோடு முடித்துக்கொள்ளலாம்; ஏனெனில், இந்த நம்பிக்கைக்குரிய காலத்தில், விசுவாசமானது இறுதியாகத் தேவசிநேகம் என்னும் புண்ணியத்தில் முற்றுப்பெறவேண்டும். இன்றைய 'நிருபம்', அர்ச். சின்னப்பர் கொலோசியருக்கெழுதிய "கடிதத்திலிருந்து" (அவர் அதைக் கடிதம் என்றே குறிப்பிடுகிறார் - கொலோ: 4 : 16) எடுக்கப்பட்டுள்ளது. அதில் தன் வாசகர்களை, பிரகாசத்தில் மிளிரும பரிசுத்தவான்களின் சுதந்தரத்திற்குப் பங்காளிகளாகத் தக்கவர்களாகும்படி கேட்கிறார். பாத்திரமுள்ளவர்களாய் நடத்தல், ஒவ்வொரு நற்கிரியையிலும் பயனுடையவர்களாயிருத்தல், கடவுளின் ஞானத்தில் அதிகரித்தல், நன்றியறிதல்.... ஆகிய, கடந்த இஸ்பிரீத்து சாந்துவின் திருநாட்கால ஞாயிற்றுக்கிழமைகளின் நிருபங்கள் எல்லாவற்றின் கிறிஸ்தவ நடவடிக்கைகளை இன்றையநிருபம் எதிரொலிக்கின்றது. இன்றைய சுவிசேஷம் பாவச்சீவியத்தைக் கைக்கொண்டிருப்போருக்குப் பயத்தைத் தரும். ஆண்டவரின் வருகையை எதிர்நோக்கியிருப்போருக்கு இது ஓர் சஞ்சீவிபோலிருக்கும். சுவிசேஷத்தில் காணப்படும் ஜெருசலேம்நகரின் அழிவு அதன் தீர்க்கதரிசனத்துக்கு அடுத்த நாற்பது ஆண்டுகளுக்குள் நடைபெற்றது. உலகிற்கு ஓர் முடிவு கட்டாயம் ஏற்பட்டேதீரும், ஆனால், "எப்போது" என்பது நிச்சயமற்றது. அதுவரையும் எமது நம்பிக்கை தளரக்கூடாது.

காலத்தின் எல்லைவரை எமக்குத் திருச்சபை படிப்பிக்கும் உண்மைகளின் மட்டில், எமக்குள்ள முறிவுபடா விசுவாசத்தைக் காண்பிக்குமுகமாக இன்று நாம் விசுவாச மந்திரத்தை விசேஷ பக்தியோடு செபிப்போம்.

### பலிக்குரிய பாகம்

"அமைதி மன்றாட்டு" சந்தோஷமாய் முடிவடைகின்றது: "உமது மக்களின் செபங்களையும், காணிக்கைகளையும் கையேற்றருளும். எங்களனைவருடைய இதயங்களையும் உமது பக்கமாய்த் திருப்பியருளும்........ நாம் பரலோக ஆசைகளையே அடையும்படி உயர்வோமாக. உத்தானச் செய்தியில் "மேலானவற்றையே தேடுங்கள்" என்று எமக்குக் கூறப்படவில்லையா? "நான் உயர்த்தப்பட்டால், எல்லாப்பொருள்களையும் என் பால் இழுத்துக்கொள்வேன்" என்று கூறிய கிறிஸ்து, இன்னும் சிலநிமிடங்களில் பீடத்தில் புதுப்பிக்கப்படவிருக்கும், தமது சிலுவைப்பலியையே குறிப்பிட்டார். அவரே எம்மிருதயங்களைத் தம்பால் இழுத்து, தீர்ப்பின் பயங்கரத்தினின்று, நீதியின்பால் அன்பிற்கும், வெறுப்புக்குரிய தேவகோப நாளினின்று நீதியின் பரிதி உதிக்கும் நாளின் பிரணத்வத்திற்கும், உயர்த்து இந்த ஞாயிற்றுக்கிழமையின் தேவவசீகரத்தின் போது நிலவும் உணர்ச்சிகரமான மௌனநிலையிலே இவையே எமது எண்ணங்களாக அமைவது சிறந்ததாகும். உண்மைச்சூரியன் இருளை அகற்றுவது போல் எமது ஆன்மாவின் அசுத்தஇருள் (அனுபவிப்புப் பகுதி) திவ்விய நற்கருணை என்னும் ஆதவனால் அழிக்கப்படல்வேண்டும்.

அன்புள்ள கிறிஸ்தவ வாசகர்களே நீங்கள் யாருக்காகக் காத்திருந்தீர்களோ அந்த மனுமகன் கட்டாயம் வருவார்.

"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்கத் தவறாதே

ஏளனம் செய்யாதே மானிடனே; சற்றே சிந்தித்துப்பார்! உனது பொன்னான வாழ்வை மண்ணாக்கிவிடாதே. காலமென்னும் சக்கரம் மிகவும் விசையாகவே ஓடுகின்றது. இந்தக் கால ஓட்டத்திலே நீயும் ஒருவனாக, சிந்தனையற்று, கண்டதேகாட்சி, கொண்டதே கோலம் என எண்ணி உனது அரிய வாழ்வைப் பாழ்படுத்திவிடாதே. உனக்கு வாழ்வு அளித்த கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதை நீ ஆழ்ந்து அறிந்தபோதிலும், நடமாடும் இந்த மேடையிலே நீயும் ஒரு கூத்தாடியாகத் தோன்றி மறைந்துவிடுவதும் ஏனோ? அப்படிச் செய்வது மடமையிலும் மடமை என்பதை உணர்ந்துகொள்வது உனக்கு ஒரு எளிதான காரியமல்ல. பொந்துதவறிச் சந்தில் விழுந்தவனைப்போல் நீ உலக மாய்கையிலே சிக்கிக் கடவுளைக் கண்ணாரக் கண்டதுமுண்டா? கடவுள் இருந்தாலும் எனக்கென்னவென்று பிடிவாதத்துடன் விடுதலையுற்றபட்சிபோற் பறந்து திரிகின்றாயாக்கும். ஆனால், புத்தி படைத்த மனிதா! உனது ஆட்ட ஓட்டங்களுக்கு மட்டுமல்ல, இந்த முழு உலகிற்குமே ஒரு முற்றுப்புள்ளி உண்டுஎன்பதை நீ மறந்தபடியாற்றான் இந்த விளைவு ஏற்பட்டது. எனவே, அன்புததும்பும் பொறுமைமிக்க யேசு உலக முடிவைப் பற்றியும், அதற்கு முன்பு நடக்கவிருக்கும் சம்பவங்களைப் பற்றியும் அமைதியுடன் கூறுவதைக் கேள். சிந்தனையற்ற உனது உள்ளத்தை இவ்வுலகம்தான் மோட்சம் என்று பிடிவாதமாகக் கூறும் உன் கல்நெஞ்சத்தை அளந்தறிந்த கடவுள் உனக்குக் கூறுகின்றார். அவதானமாகக் கேட்டுக்கொள். ஒவ்வொரு வசனத்தையும், ஏன், ஒவ்வொரு சொல்லையும் உனது விசுவாசக் கண்களாலே உற்றுநோக்குவாயானால் உண்மை புலப்படும். உனக்கு ஒரு அழியாத ஆத்துமம் உண்டு என்பதையும், அதுதான் பிரதானம் என்பதையும் அறிவாய். அப்பொழுது உனது மனச்சாட்சி உன்னையே குத்திக்கொள்ளும். "மேலும் அந்நாட்களில் உபத்திரவம் முடிந்தவுடனே சூரியன் இருள, சந்திரன் தன்னொளி கொடாதிருக்க, நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழ, வானமண்டலத்தின் வல்லமைகள் அசைக்கப்படும். அப்பொழுது மனுமகனுடைய அடையாளம் வானத்திற் காணப்படும். அதைக்காணவே பூமியிலுள்ள சகல சாதிசனங்களும் புலம்புவார்கள். மனுமகன் வான மேகங்களின்மேல் மிகுந்த வல்லமையோடும் வருவதைக் காண்பார்கள். பின்னும் அவர் ஊத்துத்தொனிக்கும் எக்காளங்களோடு தமதுதூதர்களை அனுப்புவார். அவர்கள் வானின் மேலெல்லை முதற் கடைசியெல்லை வரைக்கும் நான்கு திசைகளினின்றும் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை ஒன்றுசேர்ப்பார்கள்" (மத். 24 : 29 – 31). இவைகளை எல்லாம் கேட்டு, தாண்டவமாடும் இந்த உலகிற்கும், ஆத்துமமே கிடையாது என அஞ்சா நெஞ்சத்துடன் அறைகூவும் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு முடிவு உண்டென்று கண்டுபிடித்துவிட்டாயோ? இன்னும் பொறுமையுடன் சற்றே கேட்டுக்கொள்.

"தன் மகிமையிலே மனுமகனும், அவரோடே சகல சம்மனசுகளும் வரும்போது அவர் தன் மகிமைச் சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார். பின்பும் அவருக்குமுன்பாக எல்லாச் சனங்களும் கூட்டிவரப்படுவார்கள். ஆயன் வெள்ளாட்டுக் கடாக்களிலிருந்தே செம்மறியாடுகளைப் பிரிக்கிறதுபோல, அவரும் அவர்களை வேறுவேறாகப் பிரித்துத் தம் வலதுபாரிசத்திற் செம்மறியாடுகளையும், தம்மிடது பாரிசத்தில் வெள்ளாட்டுக் கடாக்களையும் நிறுத்துவார் (மத். 25 : 31 – 33).

இந்தப் பயங்கர சொற்களை — அனல் பொங்கும் வாக்கியங்களை நாம் கூறவில்லை. அர்ச். மத்தேயுதன்னும் கூறவில்லை. எல்லா வல்லமையுமுடைய கடவுளே கூறினார்—கிறீஸ்துநாதர் கூறினார். அவர் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு இதைக் கூறிவிட்டாரேஎன்று நாம் நம்பாமலிருக்க முடியுமோ? இது மடமையிலும் மடமை. ஏன் இச்சம்பவங்கள் நடக்குமெனத் தெரிந்துகொண்டு அதே கிறீஸ்து கூறிவிட்டார். "பரலோகமும், பூலோகமும் ஒழிந்துவிட்டாலும் எனது வாக்கியங்கள் ஒழிந்துபோகாது." எனவே, சிந்தித்துக் கருமமாற்றும் சக்திவாய்ந்த மானிடனே! சற்றே சிந்தித்துப்பார். ஆயன் என்னும் அந்தவல்லபதேவன் தனது வலது பாரிசத்தில் செம்மறியாடுகள் என்னும் நல்லவர்களையும், வெள்ளாட்டுக்கடாக்கள் என்னும் துஷ்டர்களைத் தமது இடதுபாரிசத்திலும் நிறுத்துவதாகக் கூறினாரே. அந்தப் பயங்கரப்பிரிப்பின்போது ஒன்றுமில்லாமையிலிருந்து உருவாகியஇவ்வுலகம் அழிந்தொழிந்த பின் அடுத்துவரும் நித்திய சீவியத்திற்கு வழிவகுக்கும் அந்தப் பிரிப்பின்போது மனிதா! நீ எந்தப் பக்கத்திற்குப் பிரிக்கப்படுவாய்? வலது பக்கத்திற்கா, அன்றேல் இடதுபக்கத்திற்கா? சற்றே சிந்தித்துப்பார். நல்லவர்கள் மத்தியில் நீ சேர்க்கப்படுவாயா, அன்றேல் துஷ்டர்கள் கும்பலில் தள்ளப்படுவாயா? இது பயங்கர கேள்வியாகத்தான் உனக்குத்தோன்றும். ஏனெனில், "அப்போது அரசன் தம் வலது பாரிசத்தில் இருப்பவர்களை நோக்கி வசனிப்பதாவது: "என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே! வாருங்கள்; உலக சிருட்டிப்பு முதற்கொண்டு உங்களுக்கு முஸ்திப்பாக்கப்பட்ட இராச்சியத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள் என்பார் ... ... பின்பு அரசன் இடதுபாரிசத்தில் இருப்பவர்களைநோக்கிச் சொல்வதாவது: "சபிக்கப்பட்டவர்களே! என்னைவிட்டகன்று பசாசுக்கும், அதன் தூதர்களுக்கும் முஸ்திப்பாக்கப்பட்ட நித்திய அக்கினியிற் போங்கள்" என்பார். உலகம் முடியுமட்டும் உயிருடன்இருந்து அதனால் வரும் உபத்திரவங்களை அனுபவிக்காவிடினும் இந்த மண்ணிற்பிறந்த எந்த மானிடனும் இந்தப் பயங்காத் தீர்வைக்குத் தப்பமுடியாது. எக்காளத்தொனியின் மத்தியிலே ஒவ்வொருவனும் கொண்டுவரப்படுவான். அவன் இவ்வுலகிலே இருக்கும்பொழுது செய்த அக்கிரமங்கள், அட்டாமுட்டித்தனங்கள், மூலைமுடக்குகளிலே கட்டிக்கொண்ட துரோகங்கள் யாவும் அந்த நீதிதவறாத அரசன்முன் வெள்ளிடைமலைபோன்று தெளிவாகத்தெரியும். அன்பை அள்ளி இறைத்த கடவுள், அன்பின் மிகுதியினால் — மனிதனில் கொண்ட இரக்கத்தினால் அவனுடைய இரட்சணியத்திற்காகக் கல்வாரிமலையிலே இரத்தம் சிந்தி உயிர் துறந்த அந்தக் கடவுள் இப்பொழுது அளவற்ற நீதியோடு காணப்படுவார். அவருடைய நீதிக்குமுன்பாகத் தனது பாவக்கறைகளோடு — சிந்தனையின்றிக் கோலாட்டம்போட்ட தனது வாழ்க்கையின் மாசுப்படலத்துடனே மனிதன் தலைநிமிரமுடியாது, 'மலைகளே! என்னைவந்து அமுக்குங்கள்' என்று அலறுவான். ஓடிஒழிக்க அவதிப்படுவான். ஆனால், அது முடியாத காரியம். நீதிமான்களுக்கு மோட்சம் — பாவிகளுக்கு முடிவில்லாத தண்டனை. இதுதான் நீதி.

வாழ்க்கை என்னும் பாதையிலே உல்லாச நடைபோடும் உருவமே! சற்றே சிந்தித்துப்பார். அந்த நேரத்தில் உனதுமுடிபு என்ன ஆகும். அந்த அரசன் உனக்கு என்ன தீர்ப்பு அளிப்பார். முடிவில்லாத பேரின்பபாக்கியமா அன்றேல் நிர்ப்பாக்கியமா? இந்தக் கேள்விக்கு இவ்வுலகில் இருக்கும்போதே நீ விடைகொடுத்தாகவேண்டும். அதுவும் மிகவிரைவில், ஏனெனில் உன்னை அறியாமலே காலம் கழிந்துவிடும். கள்ளனைப்போல் வரும் மரணம் உனது கண்களை எப்போது மூடிவிடுமோ எனஉனக்குத்தெரியாது.

நீ சபிக்கப்பட்டோரின் கும்பலில் நிற்கிறதாக உணர்கின்றாயா? நீ கட்டிக்கோண்ட பாவங்களின் அகோரம் உனக்குத் தென்படுகிறதா? உனது மனச்சாட்சி உன்னையே நொந்து கொள்ளுகின்றதா? பயப்படாதே. துக்கத்தின் மிகுதியினால், நீ சிந்தனையற்றவிதமாய்க் கட்டிக்கொண்ட பாவத்தின் பாரத்தால் உனது நம்பிக்கையை இழந்துவிடாதே. விசுவாசமாய் இருந்துகொண்டு சற்றே சிந்தித்துப்பார். ஆதாம் ஏவாளின் சந்ததியிலே பிறந்த எந்த மானிடனும் பலவீனமுள்ளவன்தான். அதனால்தான் பாவத்தின் கோடியிலே பிறந்த அவன் புண்ணியத்திலே வளர அல்லற்படுகின்றான். அது மனிதனின் மாசுபட்ட இயற்கை. ஆனால், ஒன்று; மனிதவர்க்கத்திற்கே வாழ்வளித்த கடவுள் இதை உணர்ந்தார். எனவேதான் இத்தகைய மனிதனில் ஒருவனாகப் பிறந்தார். எளிமைமிக்க மாட்டுக் கொட்டிலிலே இவர் பிறக்கும்பொழுது "பூமியிலே நல்ல மனதுள்ளோருக்குச் சமாதானம் உண்டாவதாக" என்று தேவதூதர்கள் பாடினார்கள். ஆமாம், யேசுநாதர் கல்வாரி உச்சியிலே கொண்டுவந்த இரட்சணியம் நல்ல மனதுள்ளோர்க்கும் மட்டும்தான்—அந்த இரட்சணியம் ஆசித்துத் தேடுபவர்க்குத்தான். எனவேதான் மானிடனே நல்ல மனதுள்ளவனாக இரு. உனக்கென்று சிந்திய இரத்தத்தை வீணாக்கிவிடாதே. உன்னைத் தேடிவந்த இரட்சணியத்தை உதறித்தள்ளிவிடாதே. தைரியத்துடனும், அதிலும்கூடிய நம்பிக்கையுடனும் உனக்கு வாழ்வு அளித்த தேவனிடம், ஏன் உனக்கு மோட்சவாழ்வு அளிக்கவென்று தன் வாழ்வை அர்ப்பணம் செய்த அன்பின் வள்ளலிடம் உனது பாவங்களைக்கூறி, மன்னிப்புக்கேட்டுக்கொள். இப்போ உன்னை அணைக்கக் காத்திருக்கும் கரங்கள், மானிடனே உனது வரவைக் காணுவிடின் கடைசித் தீர்ப்பின்போது உன்னைச் சபிக்கநேரிடும். அன்று அச்சம்மனசுக்கள் கொண்டுவந்த சமாதானம் உனக்கும் உரித்தாகவேண்டுமானால், உனக்கு ஒரு அழியாத ஆத்துமம் உண்டென்றும், அதுதான் உன் சீவியத்திலே பிரதானமென்றும் மறந்துவிடாதே—சிந்திக்கத் தவறாதே.

ச. தேபோனகலன்.

## சிந்தனைக் கதிர்

— 5 —

இன்று செய்யக்கூடியதை நாளைக்கெனப் பின்போடுதல் தவறு. ஒரு கருமத்தை நாளை ...... நாளைஎனக் கடத்திக்கொண்டே போவதினால் அவ்வலுவலில் எமக்கே அலுப்புத்தோன்றிவிடும். இதற்கிடையே வேறு புதுமுயற்சிகளும்தோன்ற, பழைய கருமமோ முடிவடையாத நிலையில் தங்கநேரிடுகிறது. இது எவ்வளவு பரிதாபம்?

ஒரு இலகுவான கருமத்தைக் கடத்திக்கொண்டு போகும்போது நாளடைவில் அதுவே ஒருகடினமான செயலாக மாறிவிடுகிறது. கடினமான செயலைக் கடத்தினால் ஈற்றில் அது செய்துமுடிக்கஇயலாத கருமமாகிவிடும். செயலாற்றக்கூடிய கருமங்களைக் கடத்திவிட்டு ஏதாவது வழிபிறக்கும்எனக காத்திருந்து ஏமாந்தோர் அதிகம்பேர்.

இன்று செயலாற்றக்கூடிய கருமமேதாவது இருப்பின் இன்றேசெய்யுங்கள். கடத்தினாலோ அபாயம் காத்திருக்கிறது. போகப்போகச் செய்யலாம்என்றும், இப்போது என்ன அவசரம்என்றும் நொண்டிச் சாக்குகள் சொல்லாதீர்கள். நாளைக்குஎன்று காத்திருக்காதீர்கள். நாளை எம்மைநோக்கி எத்தனையோ அலுவல்கள் காத்திருக்கலாம். எனவே, இன்றைக்குரியதை — இன்றைக்குச் செய்யக்கூடியதை இன்றே செய்யுங்கள்; இன்றையப்பொழுதை மண்ணாக்காதீர்கள்.

(சா. பெ.)

## கொழும்பு சஞ்சூசை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்போ சிலகாலமாகத்தான் கத்தோலிக்க தேவாலயங்கள் கீழ்த்தேச சிற்பாசாரமுறைப்படி கட்டப்பட்டு வருகின்றன. ஆனால், இதற்கு முன்னர், அவைகள் ஐரோப்பிய முறைப்படி அமைக்கப்பட்டன. அதன் காரணமாக, இலங்கையில் உள்ள தேவாலயங்கள், ஐரோப்பிய தேவாலயங்களின் சாயல்களையே கொண்டிருந்தன. இவை, இங்கு போதிக்கப்பட்டு, நிலவிவரும் கிறிஸ்தவசமயமும் ஐரோப்பியாதே என்றும், அந்நியமானதென்றும் மக்களை உறுத்திவந்திருக்கிறது.

மேலும், கத்தோலிக்கசமயப்படங்கள், சுரூபங்களைப் பற்றியும் இவ்வாறுதான் எண்ணுவார்கள் என்றும் அவர் கூறினார். ஒரு ஓவியன் எப்பொழுதும் அவனதுசூழலால் செல்வாக்குப்பெறுகின்றான். உதாரணமாக, ஐரோப்பிய ஓவியரும், சிற்பிகளும், தங்கள்நாட்டுக் கலாசாரப்படியே தேவ தாயாரின் உருவங்களையும், படங்களையும் தயாரித்தனர். அதனால்தான், ஐரோப்பிய பெண்மணிகளின், சாயல்கள் தேவதாயாரின் படங்களிலும், சிலைகளிலும் காணக்கிடக்கின்றன. இத்தன்மையை ஆசியதேசங்களில் உள்ள பௌத்தசிற்பங்களிலும், ஓவியங்களிலும் காணக்கிடக்கின்றது. சீனப்பௌத்த சிலைகளில் சீனரின்சாயலையும், சீயபௌத்த சிலைகளில் சீயமக்களின் சாயலையும் காணலாம். ஆனால், சீன, சீய, தேசத்து ஓவியர்களுக்குப் பௌத்தர் ஓர் இந்தியன் என்பது நன்குதெரிந்ததே. அதேபோல ஐரோப்பிய ஓவியருக்கும், தேவதாயார் ஒரு ஐரோப்பிய பெண்மணி அல்லள்என்பதும் தெரியும்.

நீங்கள் இத்தேசத்திலே ஒரு சிறுபான்மைச் சமயத்தைச் சேர்ந்தவர்கள். மேலும் கிறிஸ்தவர்களாகிய எம்மைச் சந்தேகக்கண்கொண்டு பார்ப்பதோடு நாம் இந்நாட்டுக்குப் புறம்பான அன்னிய கலாசாரத்தைக் கொண்டவர்கள் எனவும் கருதப்பட்டும் வருகிறோம். எங்கள் அடிப்படை உரிமைகளில் சிலவற்றை இழக்கவும் நிர்ப்பந்திக்கப்படுகிறோம். இந்நிலையில் நீங்கள் என்ன செய்யலாம்? என்று அங்கு குழுமியிருந்தோரை வினவினார். "எதிர்காலக் கத்தோலிக்க பிரசைகளாகிய நீங்கள் இந்நாட்டில் கத்தோலிக்கரும், பௌத்தர்களும் ஒருமித்து வாழ முயற்சிக்கவேண்டும்" என்று குறிப்பிட்டு, மேலும் அவர் கூறியதாவது: "தப்பறைகளை நாங்கள் ஏற்றுக் கொள்ளமுடியாது; ஆனால், மற்றசமயங்களை மதித்துநடக்கலாம். எங்களுடைய விசுவாசம் தேவவெளிப்படுத்தல்மூலம் எமக்களிக்கப்பட்டுளது" என்று கூறிமுடித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாலர் பக்கம்

அன்புத் தம்பி, தங்கையரே!

வீட்டிலே மின்விளக்கை ஏற்றி வைத்துவிட்டுச் சிவரை உற்றுப்பார்த்தேன். இரண்டு சிவர்களின் இடுக்கிலே சிலந்தியொன்று வலைபோட்டுக் கொண்டு அதன்மத்தியில் உல்லாசமாக வீற்றிருந்தது. வெளிச்சத்திலே விளையாட விருப்புக்கொண்ட சிறு பூச்சிகள் அங்கு பறந்துவந்தன. சிலந்தியின் வலையில் பூச்சிகள் சிக்கியதும், அது ஓடிச்சென்று பிடித்துத் தின்றுகொண்டிருந்தது. இதுபோலவே, பசாசும் எம்மைப் பாவவலையிலே விழுத்துகின்றது. பாவச்சமயங்கள்தான் பசாசின்வலை. அதிலே சிக்காதிருக்க யேசுநாதர் கூறியதுபோல், விழிப்பாயிருந்து செபிக்கவேண்டும். பாவச்சமயங்களிலே விசேஷவிதமாய்ச் செபிக்கவேண்டும்.

அன்புள்ள அண்ணா.

## மரித்தோரை றவா தீர்கள்



"மரித்தோர்களுக்காக வேண்டுவது பரிசுத்தமும், அதிமிகுந்த நல்லதோர் சுகிர்தவழக்கமும்." பரிசுத்த திருச்சபையின் அங்கத்தவராயிருந்து, உத்தரிப்புஸ்தலத்து ஆத்துமாக்களுக்கு உதவிபுரிவது நம்கடமையாகும்.

உத்தரிப்புஸ்தலத்தில் வேதனைப்படும் ஆத்துமங்கள் யார்? தாங்கள் உலகத்திலிருக்கும்போது கட்டிக்கொண்ட சாவான பாவங்களுக்குப் பொறுத்தல் அடைந்தாலும், சரிவர அதன் அழுக்கை. தபசு, ஒறுத்தலினால் போக்காதவர்களும், அற்ப பாவங்களோடு இறந்தவர்களுமே ஆவர். அப்பேர்ப்பட்டவர்கள்மோட்சகரைசேர ஒரேயொரு வழிதான் உண்டு. அதாவது, தங்களின் பாவதோஷத்திற்குரிய நீதியின் தீர்வையைச் செலுத்தும்வரை உத்தரிப்புஸ்தலத்தில் இருப்பவர்கள் தாங்களே தங்களுக்கு எவ்வித உதவியும்செய்ய முடியாதவர்களாயிருக்கிறார்கள். ஆதலால், நம் உதவியை அவர்கள் கோருகிறார்கள். சர்வேசுரனைக்காண அவர்கள் ஆவலாயிருப்பார்கள். ஆனால், அவர்கள் குரல் மோட்சலோகத்துக்கு எட்டாது. கடவுளைப் பார்க்கமுடியாத துக்கமே அவர்களை மிகவும் வாதிக்கும்.

நமக்கு அந்த ஆத்துமங்களுக்கு உதவிசெய்யக் கடமை உண்டு. "என்மேல் இரக்கமாயிருங்கள், என் நண்பர்களே, நீங்களாவது என்மேல் இரக்கமாயிருங்கள்" என்று கதறுகிறார்கள். நாம் எப்படி மரித்தோர்களுக்கு உதவிபண்ணுவது! சிலசமயம் நாம் மரித்தோர்களைப் புதைத்த இடத்திற்குச் சென்று புஷ்பங்களை வைத்துவிட்டு வரலாம். இதனால் நமக்கு ஏதோ அற்பமனச்சாந்தி ஏற்படும். அதனால் மரித்தோர்களுக்கு எவ்வித பிரயோசனமும் இல்லை. நாம், நம் செபத்தினாலும், உபவாசத்தினாலும், தருமம், மற்றும் நல்ல முயற்சி காரியங்களால் உண்டாகும் பலன்களை அந்த ஆத்துமங்களுக்கு ஒப்புக்கொடுக்கலாம். விசேஷமாய்த் திவ்வியபூசைகண்டு, திவ்விநற்கருணை உட்கொண்டு அந்த விசேஷ பலன்களை அவர்களுக்கு ஒப்புக்கொடுத்தால் மிகுந்த உதவியாகும்.

அலோசியஸ் ஞானரட்ணம்,
அர்ச். சவேரியார் உயர்நிலைப்பள்ளி,
தூத்துக்குடி.

நான்விரும்பும் அர்ச்சியசிஷ்டர்

## அர்ச். பிரான்சீஸ்கு அசீசியார்

அர்ச். பிரான்சிஸ்கு யேசுநாதருடைய மனத்தரித்திரம், தாழ்ச்சி, பொறுமை, தேவதோத்திரத்தின் பக்திப்பற்று முதலிய புண்ணியங்களை மேலாக அனுசரித்து வந்தவர். ஏழைகளின்மேல் இரக்கங்கொண்டதோடு, தன் வாழ்க்கையின் பெரும் பகுதியை ஏழ்மையிலேயே செலவிட்டார்.

தரித்திரம் தனது பொக்கிஷமென்றுவிரும்பி நேசித்தவர். தனது சரீரத்தை ஒரு கழுதை என்று பகைத்து அதற்குக்கடினமானவேலையையும், குறைந்த அளவான உணவையும் கொடுத்து உடலை வருத்துவார்.

அர்ச். பிரான்சிஸ்குவுக்கு ஞானப் படிப்பினைகளைப் படிப்பித்தவர் யேசுநாதரே தவிர வேறொருவருமல்ல. திவ்விய கர்த்தர் உத்தமமான ஆசிரியராக இருந்து அவரைக் கொஞ்சங் கொஞ்சமாய்ப்படிப்பித்து, நாளுக்கு நாள் அவரைத் திருத்தி மேலான புண்ணியங்களுக்குப் பழக்கிக் கொண்டுவந்தார்.

இத்தாலியிலுள்ள அசிசிஎன்னும் நகரில் பிறந்தமையால் இவர் அர்ச். பிரான்சீஸ்கு அசிசியார் என்று அழைக்கப்பட்டார்; அதே நகரத்தை அடுத்துள்ள 'பொற்சியோங்குலா' என்னும் ஸ்தலத்திலுள்ள தேவமாதாவின் கோவிலைச் செப்பனிட்டு அதில் தாழ்ச்சியுடன்வசித்து, தனது சீவியகாலத்தை முடித்தார். அவர் தான்கேட்ட தீர்க்கதரிசனத்தின்படி மூன்று கோவில்களைத் திருத்தம் செய்து செப்பனிட்டார். இவ்வாறே, சாதாரண திருச்சபையின் நன்மைக்காக மூன்று சந்நியாச சபைகளையும் ஏற்படுத்தினார்.

அவரின் வாழ்க்கையை நாமும் பின்பற்றி, தேவனுக்கும், திருச்சபைக்கும் உகந்த பிள்ளைகளாக நடப்போமாக.

ரூ. எற்வீன்,
திருக்கோணமலை.

## சிறுவர் அறிவுச் சக்கரம்—8

சரியான விடைகள்

— I —

1. அர்ச். மத்தியாஸ்
2. அர்ச். அருளானந்தர் (அர்ச். யோண் டி பிறிற்றோ)
3. அர்ச். யோண்மேரி வியான்னி
4. அர்ச். சீமோன் ஸ்தோக்
5. அர்ச். சவேரியார், அர்ச். சின்னத் திரேசம்மாள்
6. முத். எலிசபெத் பெயிலி சேத்தன்

— II —

1. யூதா கோத்திரம்
2. அந்தியோக்கியா
3. இசையாஸ் தீர்க்கதரிசி
4. மக்கபேயர் ஆகமம், இரண்டாம் புத்தகம்
5. லோத்தின் மனைவி.

இம்முறை எவரும் முழுதும் சரியான விடைகள் அனுப்பவில்லை. ஒரு பிழையுடன் விடைகள் அனுப்பியவர்கள் பின்வருமாறு:

1. பி எவன் டபரேரா, றோ. க பாடசாலை, அரிப்பு.
2. யு. சவிரியம்மா, றோ. க. பாடசாலை, அரிப்பு.
3. கி. மரிய செபமாலை பீரிஸ், றோ. க. பாடசாலை, அரிப்பு.
4. யோ. பொன் மணி, றோ. க. பாடசாலை, அரிப்பு
5. செ. அன்னரெத்தினம், றோ. க. பாடசாலை, அரிப்பு.


## நேயர்கள் கவனிக்கவும்

எனது கண்பரிசோதனை நிலையத்துக்குப் பக்கத்தில் "பேர்ணன்டோ" என்ற விலாசத்துடன் ஒரு நிலையம் ஆரம்பமாகியுள்ளது. அது எனது நிலையமன்று.

வி. ரி. பெர்ணன்டோ,
பல் வைத்தியர், கண் பரிசோதகர்
11, பெரிய தெரு,
யாழ்ப்பாணம்.


## அர்ச். பிரான்சிஸ்குவின் மூன்றுஞ்சபை

அர்ச். பிரான்சிஸ்குவின் மூன்றுஞ்சபை மாதாந்தகூட்டம் இம்மாதம் 25-ந்திகதி சனிக்கிழமை பி. ப. 4மணியளவில் சஞ்சூசையப்பர் சிற்றாலயத்தில் நடந்தேறும்

A. S. FRANCIS OF MARY,
சபைக்கர்த்தருக்காக


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 3278

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

வண்ணார்பண்ணை கிழக்கு, அரசடிவீதி
1. காசிப்பிள்ளை உருத்திரவேலுவும்,
2. மனைவி ஜெகேஸ்வரியும்
— வழக்காளிகள்.

எதிராக, வண்ணார்பண்ணை மேற்கு 17, பிச்சைக்குளம்வீதி
1. சுச்சு மொகமெட் மொகமெட் மொகிதீனும்
2. மனைவி மொகமெட் பாத்தும்மாவும்

வண்ணார்பண்ணை மேற்கு
3. K. M. சுல்தான் மொகிதீனும்
4. மனைவி மீராமொகிதீன் நாச்சியாவும்

வண்ணார்பண்ணை கிழக்கு
5. T. இரத்தினசிங்கமும்
6. மனைவி மங்கையற்கரசியும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3278-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஐந்து துண்டுக்காணிகளை 1961-ம் ஆண்டு டிசம்பர் மீ 23-உ (23-12-61) சனிக்கிழமை முற்பகல் பத்து மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 5,550. மேலும் 5,000 ரூபாவுக்கு 29-2-60 திகதிதொடக்கம் 18-1-61 திகதி வரைக்கும் வருடமொன்றுக்குப் 12வீதவட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை வருடமொன்றுக்கு 5வீதவட்டியும், கோட்டுச்செலவு 298ரூபா 25சதமும்.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோயிற்பற்று, யாழ்ப்பாணப் பட்டின 2-ம்பகுதியில் பிரதான்வீதியில் சோலைவரி 34-ம் இலக்கத்தையுடைய வீடும், காணியையுடையதும், அளவையாளர் J. D. வீரசிங்கம்அவர்களால் 21-7-31-ல் தயாரிக்கப்பட்ட 638-ம் இலக்கப்படத்தில் 2-ம்லொட்என அடையாளமிடப்பட்டதுமான $11\frac{1}{2}$குளிகளும், கல்வீடும், குசினியும், கிணற்றில்பங்கும், மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும். இதற்கு எல்லை: கிழக்கு— நயினா மரிக்கார் மொகிதீன்பிச்சைக்குரிய ஆதனம். வடக்கு — பிரதான வீதி. மேற்கு — N. M. S. மொகமெட் சுல்தான் மொகதீன் காஜாருக்குரிய ஆதனம். தெற்கு — யோக்கிம்பிள்ளைக்குரிய ஆதனம். பதிவுஇல. D 262/119.

2. ஷை யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோயிற்பற்று, வண்ணார்பண்ணை தென்மேற்கிறை "பிச்சைக்குளம் கரையும், இத்தியடியும்" ஆட்சிப்படி நிலப்பரப்பு 2, குளிகள் 2. ஆனால், அளவின்படி நிலப்பரப்பு $2\frac{1}{4}$-உம், வீடும், கிணறும், செய்பயிர்களும். இதற்கு எல்லை: கிழக்கு — ஒழுங்கையும், வாப்பா சாகிப்பின் மகள் சுல்தான் மொகிதீன் நாச்சியாவுக்குரிய ஆதனம். வடக்கு — றோட்டு. மேற்கு— காதர் சாகிப்பின் கைம்பெண் மொகமெட் களியாவுக்குரிய ஆதனம். தெற்கு — ஒழுங்கை. பதிவுஇல. D 193/68. இது முழுவதிலும் சொரியலாய் மூன்றில் ஒரு பங்கும் அதைச்சேர்ந்தவைகளும்.

3. ஷை வண்ணார்பண்ணை தென்மேற்கிறை "பிச்சைக்குளம்கரையும், இத்தியடியும்" நிலப்பரப்பு 1-உம், பயிர்களும், மேற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் அரைவாசிப்பங்கும். இதற்கு எல்லை: கிழக்கு— ஒழுங்கை. வடக்கு — றோட்டு. மேற்கும் தெற்கும் — காதர் மொகிதீன் சுல்தான் மொகிதின் காஜாரின்மனைவி மீரா மொகிதீன் நாச்சியாவுக்குரிய ஆதனங்கள் பதிவுஇல. D 193/169. இது முழுவதிலும் சொரியலாய் மூன்றில் ஒருபங்கும், அதைச் சேர்ந்தவைகளும்.

4. ஷை வண்ணார்பண்ணை தென்மேற்கிறை "பிச்சைக்குளம்கரையும், இத்தியடியும்" நிலப்பரப்பு 1-உம், மேற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் அரைவாசிப்பங்கும், செய்பயிர்களும், மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும். இதற்கு எல்லை: கிழக்கு — ஒழுங்கை. வடக்கு— றோட்டு. மேற்கும், தெற்கும் — காதர் மொகிதீன் சுல்தான் மொகிதீன்காஜாரின் மனைவி மீரா மொகிதீன் நாச்சியாவுக்கும், அசனா மரிக்கார் காதர் மொகிதீன் மனைவி சுலைகா உம்மாவுக்குமுரிய ஆதனம். பதிவுஇல. D 165/219 இது முழுவதிலும் சொரியலாய் ஒன்பதில் ஒருபங்கும், அதைச் சேர்ந்தவைகளும்.

5. ஷை வண்ணார்பண்ணை தென்மேற்கிறை "பிச்சைக்குளம்கரையும், இத்தியடியும்" நிலப்பரப்பு $\frac{7}{8}$-உம், வீடும், செய்பயிர்களும். இதற்கு எல்லை: கிழக்கு— பாத்தும்மா நாச்சியாவுக்குரிய ஆதனம். வடக்கு — றோட்டு. மேற்கு — அப்துல் ஆலியம்சாகிப் சயினுத்தீனுக்கும், பங்காளர்களுக்கும் உரியஆதனம். தெற்கு — உம்மாச்சிப்பிள்ளைக்கும், பங்காளர்களுக்கும் உரியஆதனம். பதிவு இலக்கம் D 262/120. இது முழுவதிலும் சொரியலாய் அரைவாசிப்பங்கும், அதைச்சேர்ந்தவைகளும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
கொமிஷனர்.

643, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். 2-11-61


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எஸ். சேபமாலைமரியை
செல்வராணியின்

## 6-ம் வருட மரணஞாபகம்

பிறப்பு : 2-5-20 இறப்பு : 28-11-55

எங்கள் மனதைவிட்டு அகலாத எனது நேசபத்தினியாகிய செபமாலைமரியை செல்வராணி இப்பூவுலகை விட்டு மறைந்த 6-ம் வருட நினைவுதினம் 28-11-55-இல் பூர்த்தியாகிறது. அன்று காலை 6 மணிக்கு ஊர்காவற்றுறை, சந்தியோகுமையோர் கோவிலிலும், மட்டக்களப்பு, அர்ச் வியாகுலமாதா கோவிலிலும் இவவின் ஆத்தும இளைப்பாற்றிக்காகத் துக்கப்பாடற்பூசைகள் நிறைவேறும். இதனைக்கண்ணுறும் வண. குருப்பிரசாதிகளையும், சங். சந்நியாசர், கன்னியாஸ்திரிகளையும், அன்புள்ள கிறிஸ்தவர்களையும் தேவன் இவவுக்கு நித்திய இளைப்பாற்றியை அருளுமாறு மன்றாடும்படி தாழ்மையுடன் வேண்டிக் கொள்ளுகிறோம்.

பிரியபத்தினியையிழந்து துயருறும்
திரு. கே. செபமாலையும், பிள்ளைகளும்.
பொலிஸ் அதிபர், சுன்னாகம்



திருமதி றெஜினு ஜேம்ஸ் பாக்கியம்
அமலன் பதம்சேர்ந்த

## 5-ம் வருட ஞாபகம்

தோற்றம் 4-5-1917 மறைவு 29-11-1956

"கடைசிநாளிலே நான் மண்ணிலிருந்து உயிர்த்தெழுந்திருப்பேன். எனது சரீரமே மறுபடியும் எனக்கு அளிக்கப்படும். அப்போது என்தேவனை என் சொந்தக்கண்களாலேயே காண்பேன்" யோ. X. I. X. 25—27).

எங்களால்என்றும் மறக்கமுடியாதவிதமாய் எங்களை நேசித்தார். மண்ணில் மறைந்தாலும், எங்கள் அகக்கண்முன் என்றும் மறையாதிருக்கும் என் பிரிய மனைவியும், எங்கள் நேசஅன்னையுமான திருமதி றெஜினு ஜேம்ஸ். பாக்கியம்அவர்கள் இறைவன் திருவடிசேர்ந்த 5-ம்ஆண்டு நிகழும் கார்த்திகைத்திங்கள் 29-ந்திகதி பூர்த்தியாகின்றது. அன்றுதினம் இளவாலை, சந்தானுசியார் திருப்பதியில் அன்னாருடையஆன்மா சாந்தியடையுமாறு ஓர் துக்கப்பாடற்பூசை நிறைவேறும். இப்பலியில் பங்குபற்றிக் கிறிஸ்தவ கருணையோடு இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு விசுவாசிகள் அனைவரையும் பணிவுடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இவரையிழந்து துன்புறும்
கணவர், பிள்ளைகள்.

இளவாலை,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 3673

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

மயிலிட்டி தெற்கு
நல்லதம்பி கந்தையா —வழக்காளி.
எதிராக
யாழ்ப்பாணம், வயாவிழான்
செல்லப்பா முத்துத்தம்பி —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3673-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் எட்டுத்துண்டுக் காணிகளை 1961-ம்ஆண்டு மார்கழிமாதம் 27-ந் திகதி (27-12-61) புதன்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை : முதல்வட்டி ரூபா 805/00-உம், 4-10 60 தொடக்கம் 28-3-61வரைக்கும் ரூபா 500-க்குப் 10%வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5%வட்டியும், கோட்டுச் செலவு 180ரூபா 97சதமும்.

### ஆதனங்களின் இடாப்பு

1. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி, மயிலிட்டி கோயிற்பற்று வயாவிழான்இறை "விடாரவத்தை" நிலப்பரப்பு ஒன்பதும், குளி மூன்றும், செய்பயிர் வான்பயிர் களும், வடலிகளும். இதற்கு எல்லை : கிழக்கு— ஞானப்பிரகாசம் மனைவி சின்னக்குட்டிக்குரிய ஆதனம். வடக்கு — ஒழுங்கை. மேற்கு — செல்லையா பெண் ஆனுசிப்பிள்ளைக்குரிய ஆதனம். தெற்கு — வயிரவன் வேலனுக்கும், செல்லையா பெண் முத்துப்பிள்ளைக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி (½).

2. ஷெ இறை "கிளானை" நிலப்பரப்புப் பதினுலும், பனைகளும். இதற்கு எல்லை: கிழக்கு — பின்னுற்காணும் மூன்றும் ஆதனம். வடக்கு — லோப்பு அந்தோனிக்கும், பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு — வயித்தியாம்பிள்ளை ஞேசைப்பிள்ளைக்குரிய ஆதனம். தெற்கு — லோப்பு அந்தோவுக்குரிய ஆதனம். இதடங்கலிலும் சொரியலாய் நாலிலொன்று (¼).

3. ஷெ இறை "கிளானை நிலப்பரப்பு பதினுலும், பனைகளும். இதற்கு எல்லை: கிழக்கு— இராமனுதர் ஆறுமுகத்துக்கும், அந்தோப்பிள்ளை கைப்பெண் முத்துப் பிள்ளைக்கும், சகோதரங்களுக்கும், விஞசுப்பிள்ளை சவிரிமுத்துவுக்கும், பங்காளிகளுக்குமுரிய ஆதனங்கள். வடக்கும், தெற்கும் — லோப்பு அந்தோவுக்கும், பங்காளிகளுக்குமுரிய ஆதனம். மேற்கு — வயித்தியாம்பிள்ளை ஞேசைப்பிள்ளைக்குரிய ஆதனம். இதடங்கலிலும் சொரியலாய் ஐந்திலொருபங்கில் அரைவாசி.

4. ஷெ இறை "வெடியன்புலம்" நிலப்பரப்பு $22\frac{1}{8}$ இதற்கு எல்லை : கிழக்கு— ஆறுமுகம் காசினுதருக்கும், மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு — ஒழுங்கை. மேற்கு — தம்பு பெண் இராசம்மாவுக்குரிய ஆதனம். தெற்கு — அப்பாக்குட்டி பொன்னையாவுக்கும், பங்காளிகளுக்குமுரிய ஆதனம். இதடங்கலிற் சொரியலாய் நாலிலொருபங்கு (¼).

5. ஷெ இறை "அல்லியவத்தை" நிலப்பரப்பு 3. இதற்கு எல்லை : கிழக்கு — சேதுப்பிள்ளை லோப்புப்பிள்ளைக்கும், மனைவி பிலிப்பாத்தைக்குமுரிய ஆதனம். வடக்கு — ஒழுங்கை. மேற்கு — கிறிஸ்தோப்பிள்ளை மனைவி எலிசபேத்துக்குரிய ஆதனம். தெற்கு — மாப்பானரின் கைம்பெண் சின்னத்தங்கத்துக்கும், பங்காளருக்குமுரிய ஆதனம். இவ்எல்லைப்படி இதடங்கலிலும் சொரியலாய் அரைவாசியும், இன்னும் இக்காணிக்குக் கிழக்கே இதன் பின்னுற்காணும் 6-ம் ஆதனத்துக்குள் இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும், வழிவாய்க்காலும்.

6. ஷெ இறை "அல்லியவத்தை" நிலப்பரப்பு 8, குளி $9\frac{3}{4}$-உம், பனைகளும். இதற்கு எல்லை : கிழக்கு — செல்லையா பெண் ஆனுசிப்பிள்ளைக்குரிய ஆதனம். வடக்கு— ஒழுங்கை. மேற்கு — மேற்கூறிய 5-ம் ஆதனம். தெற்கு — தம்பு பெண் இராசம்மாவுக்குரிய ஆதனமும், கிணறும். இவ் எல்லைகட்குட்பட்டவைகளில் குறித்த கிணற்றில் பிறபங்காளருக்குரிய தண்ணீர்ப்பங்கு வழிவாய்க்காலும் பிறநீங்கலாக. மிகுதியிலும் சொரியலாய் அரைவாசி.

7. ஷெ இறை "செருக்கலி" நிலப்பரப்பு 44. இதற்கு எல்லை : கிழக்கு — விஞயர் சின்னத்தம்பிக்கும், மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு — பென்சமின் அந்தோவுக்குரிய ஆதனம். மேற்கு — ஞானப்பிரகாசம் பெண் சின்னக்குட்டிக்கும், மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு — வயித்தியாம்பிள்ளை மகள் தங்கம்மாவுக்கும், மறுபேருக்குமுரிய ஆதனம். இதிற்சொரியலாய் நாலில் மூன்றுபங்கில் அரைவாசி.

8. ஷெ இறை "குட்டியாப்புலம்" நிலப்பரப்பு 16. இதற்கு எல்லை : கிழக்கு — மூத்ததம்பி தம்பையாவுக்கும், செல்லப்பா பெண் பிலிப்பாச்சிப்பிள்ளைக்குமுரிய ஆதனங்கள். வடக்கு— அந்தோப்பிள்ளை சிங்கராசாவுக்கும், மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு — முருகேசர் கந்தையாவுக்குரிய ஆதனம். தெற்கு — செல்லப்பா பெண் பிலிப்பாச்சிப்பிள்ளைக்கும், மறுபேருக்குமுரிய ஆதனம். இவ் எல்லைப்படி இதடங்கலிலும் சொரியலாய் அரைவாசியும், இன்னும் இக்காணிக்குத்தெற்கே எனக்கும், மறுபேருக்கும், பங்காளை காணிக்குளிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும், வழிவாய்க்காலுரித்தும்.

அ. வெற்றிவேலு,
கொமிஷனர்.

இல. 19, வேம்படிவீதி,
யாழ்ப்பாணம், 20-11-61.

# கோட்டுவிற்பன்வு விளம்பரம்

## இலக்கம் M. B. 3199.

## யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

நெடுந்திவு மேற்கு தனுக்கோடி கணபதிப்பிள்ளை — வழக்காளி.
எதிராக, நெடுந்திவு கிழக்கு
1. கணபதிப்பிள்ளை கந்தையாவும், ஷெயூர். 2. பெண் புவனேஸ்வரியும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3199-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஏழுதுண்டுக்காணிகளை 1961-ம்ஞூ மார்கழிமீ 14-ந்உ வியாழக்கிழமை முற்பகல் ஒன்பதுமணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,361 - 50சதமும், ரூபா 700-க்கு 24-12-59 தொடக்கம், 18-2-60 வரை 12வீதமானவட்டியும், அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதமானவட்டியும், கோட்டுச்செலவு 184ரூபா 90சதமும்.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் தீவுப்பகுதி நெடுந்திவுக் கோயிற்பற்று, நெடுந்திவு நடுக்குறிச்சி "குரக்கன்தோம்பு" பர. நில. இலா. பதினைந்து (ப. நி. இ. 15)உம், வீடும், தென்னைகளும், மற்றும் செய்பயிர் வான்பயிர்களும். எல்லை : கிழக்கு — விசுவலிங்கம் பெண் நாகமுத்துவிற்குரிய ஆதனம். வடக்கு — கணபதிப்பிள்ளை கைம்பெண் வள்ளியம்மைக்கும், பங்காளர்கட்கும், விசுவலிங்கம் பெண் நாகமுத்துவிற்கும் பங்காளர்கட்கும் உரியஆதனங்கள். மேற்கு — நாகனுதர் வேலுப்பிள்ளைக்கும், பங்காளர்கட்கும் உரியஆதனம். தெற்கு — வேலுப்பிள்ளை கைம்பெண் வள்ளியம்மைக்கும், பங்காளர்கட்கும், மறுபேருக்கும் உரிய ஆதனம். இதில் வீடும், தென்னைகளும் பிறநீங்கலாக. மிகுதியடங்கலிற் சொரியலாய் $\frac{1}{5}$பாகம்.

2. ஷெயிறை "மண்ணிக்கூடல்" பர. நில. இலா. இருபத்தைந்து (ப. நி. இ. 25)உம், வீடும், தென்னைகளும், மற்றும் செய்பயிர் வான்பயிர்களும். எல்லை : கிழக்கு — அருளானந்தம் பெண் வள்ளியம்மைக்கும், பங்காளர்கட்கும், வேலுப்பிள்ளை கைம்பெண் வள்ளியம்மைக்கும், பங்காளர்கட்கும் உரியஆதனங்கள். வடக்கு — வேலுப்பிள்ளை கைம்பெண் வள்ளியம்மைக்குரிய ஆதனம். மேற்கு — சித்திவிநாயகர் கோவிலுக்குரிய ஆதனம். தெற்கு — சின்னத்தம்பி பெண் வள்ளியம்மைக்குரிய ஆதனம். இதில் வீடும, தென்னைகளும் பிறநீங்கலாக. மிகுதியில் சொரியலாய் $\frac{1}{20}$ பாகம்.

3. ஷெயிறை "புத்திரன்தோம்பு" பர. நில. இலா. முப்பது (ப. நி. இ. 30) உம், வீடும், கிணறும், மற்றும் செய்பயிர் வான்பயிர்களும். எல்லை : கிழக்கு — இராமநாதர் கைம்பெண் மீனுட்சிப்பிள்ளைக்கும், பங்காளர்கட்கும் உரியஆதனம். வடக்கு— கந்தையா பெண் குஞ்சிப்பிள்ளைக்கும், பங்காளர்கட்கும், கனகசிங்கம் கோபாலுவிற்கும் உரியஆதனங்கள். மேற்கு — நாகப்பர் மகள் பெருமாத்தைக்கும், பங்காளர்கட்கும், கனகசிங்கம் கோபாலுவிற்கும், பங்காளர்கட்கும் உரியஆதனங்கள். தெற்கு— சுப்பிரமணியம் பெண் சேதுப்பிள்ளைக்கும் பங்காளர்கட்கும் உரியஆதனம். இதில் வீடும், தென்னைகளும் பிறநீங்கலாக. மிகுதியில் சொரியலாய்ய் $\frac{1}{10}$ பாகம்.

4. ஷெயிறை "வேம்பன்வளவு" ஏறக்குறைய பர. நில. இலா. அறுபது (ப. நி. இ. 60)உம், வீடும், தென்னைகளும், மற்றும் செய்பயிர் வான்பயிர்களும். எல்லை : கிழக்கு — விசுவலிங்கம் சுவாமிநாதருக்கும் பங்காளர்கட்கும் உரியஆதனம். வடக்கு — வயித்திலிங்கம் பெண் நாகாத்தைக்கும், பங்காளர்கட்கும் உரியஆதனம். மேற்கு— இராமன் சின்னத்தம்பிக்கும், பங்காளர்கட்கும் உரியஆதனம். றெற்கு — ஒழுங்கை. இதில் வீடும், தென்னைகளும் பிறநீங்கலாக. மிகுதியில் சொரியலாய் $\frac{1}{25}$ பாகம்.

5. ஷெயிறை "தாம்பாவளவு" பர. நில. இலா. இருபது (ப. நி. இ. 20)உம், செய்பயிர் வான்பயிர்களும். எல்லை : கிழக்கு — இராமர் கைம்பெண் நாகமுத்துவிற்குரிய ஆதனம். வடக்கு— சின்னன் தனுக்கோடிக்கும், மறுபேர்கட்கும் உரியஆதனம். மேற்கு ஞேட்டு. தெற்கு — பெருமாள் நாகமுத்துவிற்குரிய ஆதனம். இதடங்கலிற் சொரியலாய்ப் $\frac{1}{10}$ பாகம்.

6. ஷெயிறை "முத்தன்வளவு" ஏறக்குறைய பர. நில. இலா. இருபது (ப. நி. இ. 20)உம், செய்பயிர் வான்பயிர்களும், வீடும். எல்லை : கிழக்கு — கந்தையாபிள்ளை முத்துவிற்கும், மறுபேர்கட்கும் உரியஆதனம். வடக்கு — கதிரவேலு பெண் சேதுப்பிள்ளைக்கும், மறுபேர்கட்கும் உரியஆதனம். மேற்கு — சின்னத்தம்பி பெண் வள்ளியம்மைக்கும், மறுபேர்கட்கும் உரியஆதனம். தெற்கு — சுப்பிரமணியம் பெண் வள்ளிப்பிள்ளைக்கும், மறுபேர்கட்கும் உரியஆதனம். இதில் வீடும், தென்னைகளும் பிறநீங்கலாக. மிகுதியடங்கலிற் சொரியலாய் $\frac{1}{5}$பாகம்.

7. ஷெயிறை "பன்னைத்தோட்டம்" ஏறக்குறைய பர. நில. இலா. இருபது (ப. நி. இ. 20)உம், செய்பயிர் வான்பயிர்களும். எல்லை : கிழக்கு — கந்தையா நாகனுதிக்கும், பங்காளர்கட்கும் உரியஆதனம். வடக்கு — சின்னப்பா பெண் சின்னக்குட்டிக்குரிய ஆதனம். மேற்கு — அருளானந்தம் பெண் வள்ளியம்மைக்குரிய ஆதனம். தெற்கு — முருகப்பர் நாகப்பருக்கும், மறுபேர்கட்கும் உரியஆதனம். இதடங்கலிற் சொரியலாய் $\frac{1}{5}$ பாகம்.

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்.

காரைநகர், 1961-ம் வருடம் கார்த்திகைமாதம் 6-ந் திகதி.

"சந்ததி விருத்தியைத் தேவையான அளவுக்குக் கட்டுப்படுத்திக் கொள்ளச் சுய கட்டுப்பாடு ஒன்றுதான் நிச்சயமான மார்க்கம். கர்ப்பத்தடைக் கருவிகளைப் பயன்படுத்தினுல் அது மனித குணத்தின் தற்கொலையாகும்."
—காந்தியடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க செய்திகள்

### பரிசுத்த தந்தைஅளிக்கும் ஆறுதல்

"உங்கள் முன்னோர்களின் சமயமான கத்தோலிக்கமறைக் கோட்பாடுகளைக் கடைப்பிடித்துநடந்து, திருச்சபைக்குப் பிரமாணிக்கம்தவருத பிள்ளைகளாக இருந்து, உங்கள் துன்பத்தினிடையே இன்பம்கண்டு மகிழ்ச்சிகொள்ளுங்கள்" என்று ஹங்கேரிய கத்தோலிக்கருக்கு ஆறுதல்செய்தி அனுப்பியுள்ளார் பரிசுத்ததந்தை. அண்மையில் கலோஸ்கா நகரின் அதிமேற்றிராணிஆண்டகை மரித்தபோது, தம்துயரத்தைத் தெரிவிக்குங்கால் தந்தையவர்கள் இவ்வாறு ஆறுதல்கூறினர்.

### பாத்திமாவுக்கு ஆசி

சென்றமாதம் பாத்திமா நகரிலே நடந்த விழாவுக்கு ஆசி அனுப்புகையில் தந்தைகூறினர்: "இவ்விழாக் கொண்டாட்டம் கிறிஸ்தவ வாழ்வினுடைய மறுமலர்ச்சியின் ஒரு முன்னேடி என நாம் கருதுகின்றோம். இம் மறுமலர்ச்சியைத்தான் தந்தையும் ஆயனுமாகிய நம் உள்ளம் எங்கும் என்றும் தேடிக்கொண்டிருக்கிறது." இவ்விழாவிலே வேண்டிக்கொள்ளுமாறு தந்தை தம் விசேஷ கருத்துக்களைத் தெரிவித்தார். (1) உள்ளத்திலும் குடும்பத்திலும் சமூகத்திலும் இறைவனின் அரசு நிலவ; (2) வரும் 2ஆம் வத்திக்கான் பொதுச் சங்கத்திற்காக; (3) உலக சமாதானத்திற்காக.

### வேதகலாபனை முடிந்தது

சென்ற ஓராண்டளவாக டொமினிக்கன் குடியரசில் நடந்துவந்த வேதகலாபனை முடிவுக்குவந்துள்ளது. டொமினிக்கன் குடியரசு திருச்சபையோடு மீண்டும் நட்புறவு ஏற்படுத்திக்கொண்டுள்ளது. இவ்வளவுகாலமாகப் பாகிஸ்தானில் பாப்புவின் தூதுவராக இருந்த பேரருட் பெருந்தகை எம்மானுவெல் க்லாரிஸியோ ஆண்டகை இப்போது டொமினிக்கன் குடியரசுக்குத் தூதுவராகச் செல்கின்றார். நாடுகடத்தப்பட்டிருந்த குருக்கள் இப்போது திரும்பி வந்துகொண்டிருக்கின்றனர். விரைவில் எல்லாப்பங்குகளும் செயற்பட்டு எழும்.

### புதுப்பொலிவுபெறும் பேராலயம்

ரோமை பரிசுத்த இராயப்பர் பேராலயம் வரும் ஓராண்டிற்குள் புதுப்பொலிவு பெற்று விளங்கும். (1) **புதிய ஒளியமைப்பு:** இத் திங்களிலே விளக்கொளி நேரே கண்ணில் படாத புதிய ஒளியமைப்பு பேராலயத்தின் எல்லாப்பகுதிகளிலும் அமைக்கப்பட்டு, பேராலயத்தையே ஓவியக் களஞ்சியமாக மாற்றிவிட்டது. இவ்வளவு காலமாக வியப்பாரற்றுக் கிடந்த விலைமதிக்கப்படா ஓவியக் களஞ்சியங்கள் மக்களின் பெரும் வியப்புக்கு உள்ளாகிவிட்டன. (2) **புதிய ஆசன அமைப்பு:** தற்போதுள்ள அதிக வசதியற்ற ஆசன அமைப்பை அகற்றி, விரைவில்வைத்து விரைவில் அகற்றக்கூடிய ஒரு புது அமைப்பு விரைவில் உருவாகும். இரும்புச் சட்டத்திலே மெருகேறிய மரப் பலகைகளைக் கொண்டதாக இருக்கும் இப்புது அமைப்பு. (3) **புதிய கின்னரப் பெட்டி** ஒன்று சிங்காசனப் பீடத்திற்கு அருகே அமைக்கப்படும். இது பழைய கின்னரப்பெட்டியோடு இணைக்கப்பட்டு, இரண்டும் ஒரேநேரத்தில் ஒரே பண் இசைக்க வழிசெய்யப்படும். (4) **மாபெரும் மூன்று புதிய வெண்கலக் கதவுகள்:** பேராலயத்தின் முகப்பிலுள்ள மூன்று நுழைவுகளுக்கு மூன்று பெரும் வெண்கலக் கதவுகள் பொருத்தப்படும். தயாராக இருந்தால், இக்கதவுகள் வரும் பொதுச்சங்கத்தின் நினைவுச் சின்னமாக சங்க ஆரம்பத்தில் பொருத்தப்படலாம். ஒவ்வொரு கதவும் 25 அடி உயரமும், 12 அடி அகலமும், 1103 பவுண்டு கனமுமுள்ளதாக இருக்கும். இப்பேராலயத்தின் முகப்பில் மொத்தம் ஐந்து நுழைவுகள் உள்ளன. நடுவில் உள்ள வெண்கலக் கதவு பெரும் விழாக்களில் மட்டுமே திறக்கப்படும். வலக் கோடியில் இருக்கும் கதவு ஜூபிலி ஆண்டில் மட்டும பரிசுத்த தந்தையால் திறக்கப்படும். மற்ற ஆண்டுகளில் மூடப்பெற்று வெளிப்புறத்தில் செங்கல் சுவரால் மறைக்கப்படும். மற்ற மூன்று கதவுகளும் மரக் கதவுகள். இவைகளே இப்போது மாற்றப்படுகின்றன.

### ஜப்பான்மொழியில் திருச்சபைச் சட்டம்

யேசு சபையைச் சார்ந்த அலோய்சியுஸ் சிவிஸ்கா சுவாமிகள் கடந்தபத்து ஆண்டுகளாக உழைத்து, திருச்சபை சட்டத் தொகுப்பை ஜப்பான் மொழியில் மொழி பெயர்த்துள்ளார். அடுத்த ஆண்டு துவக்கத்தில் வெளியிடப்படும் திருச்சபை சட்டத்தொகுப்பை மொழிபெயர்க்க வத்திக்கானின் உத்தரவு தேவை.

### புன்னகைபுரியும் கன்னியர்

முப்பது ஆண்டுகளுக்குமுன் ஐந்து சகோதரிகள் சேர்ந்து 'சிலுவையிலறையப்பட்ட யேசுவின் சகோதரிகள்' எனும் துறவறச் சபையை ஏற்படுத்தினர். சபையைச் சார்ந்த அனைவரும் நோயாளிகள். இன்று இச்சபையில் ஒன்பது மடங்களும் 250 சகோதரிகளும் உள்ளனர். சபையானது ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பரவியுள்ளது. சகோதரிகள் அனைவரும் பலதரப்பட்ட நோயினல் துன்புறுகின்றவர்கள். சபை ஸ்தாபகர் கூறுகின்றார்: "போதனையால் அன்று: நோயுற்ற எங்கள் வாழ்க்கையில் நேரும் நோக்காடுகளையும், துன்பங்களையும், அவமானங்களையும் புன்னகையுடன் ஏற்று இரட்சிப்பின் வேலையைத் தொடர்ந்து நடத்துவதே எங்கள் அப்போஸ்தலத்துவம்".

### வத்திக்கானும் சீரியாவும்

சீரிய புதியஅரசை வத்திக்கான் அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொண்டது. சீரிய தலைமை அமைச்சர் திரு. மமூண் குஸ்பாரி வத்திக்கானேடு தம் அரசு திரும்ப உறவுகொள்ளவிருப்புவதாக ரோமைக்குத் தந்தியனுப்பினர். சீரியா முன்னுளில் வத்திக்கானேடு கொண்டிருந்தஉறவு, சீரியாவும், எகிப்தும் சேர்ந்து ஐக்கியஅரபுக் குடியரசை ஏற்படுத்தியபோது துண்டிக்கப்பட்டது. இவ் ஐக்கியகுடியரசின் அப்போஸ்தலிக்கதூதுவர் கெய்ரோவில் தங்கியிருந்தார்.

### புதியவோர் முத்தர்

அண்மையில் முத்திப்பேறுபட்டம் பெற்ற இன்னேசென்ட் பெர்ஸோ ஓர் இத்தாலியகுரு. செவோ கிராமத்தில் இவர் பங்குக்குருவாயிருக்கையில் இவரின் தாய் இவருக்கு உணவுவசதி அளிக்க இவருடன் தங்கிஇருந்தார். பெர்ஸோவின் தயாள அன்பு இத்தாய்க்குப் பெரும் தலைவலியாக இருந்தது. பெர்ஸோ, தங்களுக்காகத் தயாரிக்கப்பட்ட உணவை ஏழைகளுக்குக் கொடுத்துவிடுவார். தமபடுக்கையை ஒரு நாள் நோயுற்ற ஒரு பெண்ணுக்கு அளித்தார். ஒரு கோழிக் குஞ்சை அடுப்பில் வேகவைத்து வெளியேசென்ற தாய் திரும்பி வந்து பார்க்கையில் கோழிக்குஞ்சு அங்கு இல்லை. ஓர் ஏழை அதை எடுத்துக் கொண்டுபோய்க் கொண்டே இருந்தான். பெர்ஸோவின் ஈகைக்குணம் இதையும் கொடுத்துவிட்டது. பெர்ஸோ பிறகு ஒரு கப்புச்சின் குருவாகி 1890-ல் பரிசுத்த தந்தையின் மேற்றிராசனமாகிய பெர்காமோ நகரில் மரித்தார். இவர் பிறந்தது 1844-ல். இவர் மரித்து அடக்கம்செய்யப்படுமுன், இவருடைய உடையை மும்முறை மாற்றவேண்டிய அவசியம் நேர்ந்தது. திருப்பண்டமாக அவருடைய உடையை மக்கள் வெட்டி வெட்டி எடுத்துச்சென்றனர்.

### தேவ அழைத்தல் நிபுணர்களின். மாநாடு

குருக்கள், துறவற சகோதரர், கன்னியர் இவர்களின் தேவஅழைப்பு இன்றைய உலகில் குறைந்து விட்டது. இக்குறையை நிவிர்த்திக்க 26நாடுகளினின்று நிபுணர்கள் ஒன்றுகூடி, தக்க வழி கண்டுபிடிப்பர். இவர்கள் வரும் டிசம்பர் திங்கள் ரோமையில் கூடுவர். துறவறச் சபைகளைக் கண்காணிக்கும் திருச்சங்கத்தின் மேற்பார்வையில் வேலைசெய்யும் இவர்கள் சமூகத் துறையில் வல்லுநர்கள், உளநூல் ஆராய்ச்சி வல்லுநர்கள், மக்களிடையே ஒற்றுமை உறவுத் துறையில் வல்லுநர்கள் ஆகிய இவர்களைச் சந்தித்து, தேவ அழைப்பை அதிகரிக்க இன்றைய உலகிற்கேற்ற புதுமுறைகளைக் குறித்து விவாதிப்பர். இப்புது முறைகளை உலகிற் பரப்ப, "மரியாயின் வீடு" என்ற கட்டிடத்தில் கண்காட்சி ஒன்று நிறுவப்பெறும்.

### மூன்று புதியபூசைகள்

திருச்சடங்கின் திருச்சங்கம் ரோமன் மிஸ்ஸலில் சேர்த்துக் கொள்வதற்காக மூன்று புதிய பூசைகளை வெளியிட்டுள்ளது. அவை: (1) துறவிகள் வார்த்தைப்பாடு எடுக்கும்போது செய்ய ஒரு பூசை; (2) கன்னியர் வார்த்தைப்பாடு எடுக்கும்போது செய்ய ஒருபூசை; (3) துறவறதேவ அழைப்பு அதிகரிக்க ஒருபூசை.

நான்காம் வகுப்புப்பூசை அனுமதிக்கப்பட்டிருக்கும் நாட்களிலெல்லாம் இம்மூன்று பூசைகளும் எவ்விடத்திலும் சொல்லப்படலாம். "அனைத்துலக தேவஅழைப்பு நாள்" ஒன்றை நிர்ணயிக்கத் திருச்சடங்கின் திருச்சங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கின்றது. இந்நாள் நிர்ணயிக்கப்படின் "துறவற தேவஅழைப்பு அதிகரிக்க" வெளியிடப்பட்டுள்ள பூசை சாதாரணமாக அன்றைய தினத்திற்கு அனுமதிக்கப்படும்.

## போலாந்தில் மரணப்...

[1-ம் பக்கம் தொடர்ச்சி]

அல்லது வேறு உபயோகத்திற்காக மாற்றப்படுகின்றன. சுற்றுப்பிரகாரங்களுக்குத் தடை.

போலாந்தின் கர்தினல் மேன்மைதங்கிய விஜின்ஸ்கி ஆண்டகை ஓர் இரும்புமனிதர். அவரின் தலைமையில் போலாந்துக் கத்தோலிக்கமக்கள் போரை நடத்தி வருகின்றனர். நம் சோதரருக்கு உதவ இறைவனை மன்றாடுவோமாக.

### நேர்த்தியின் பூர்த்தி

ஆறு அல்லது ஏழுவயதுள்ள எங்கள் பிள்ளையொன்றுச்குக் கடூரமான ஒருவலிவியாதியேற்பட்டுச் செய்த சிகிச்சைகள், கொடுத்த மருந்துகள் ஒன்றுலும் குணமுருது, பிள்ளையை முடித்துப்போடுந் தருவாயில்இருந்தது. அந்நேரம் நாங்கள் சதாசகாயமாதாவை இரந்து மன்றுடி, அவதான் எங்கள் பிள்ளையின் தஞ்சம் என்று அவவையே நம்பிக்கையுடன் மன்றுடினேம். அவ எங்கள்மன்றுட்டைக் கேட்டுப் பிள்ளையின் வலிக்குணத்தை மாற்றினு. பிள்ளை இப்போது சுகமாய் வாழ்கின்றது. இந்தப் பேருபகாரத்துக்கு நன்றித்துதியாக இப்போது பிரசித்தப்படுத்துகிறேம்.

செ. பி. செல்வராசா.

### யாழ்ப். மேற்றிராசன கத்தோலிக்க ஆசிரியர் சங்கம்

## ஆசிரியர் ஞானெடுக்கம்

**ஆண்கள்**

**( 13-12-61—17-12-61 )**

கத்தோலிக்க ஆசிரியர்களின் ஆன்ம நலன் கருதி எமது சங்கம் 13–12–61 புதன்கிழமை மாலை தொடக்கம் 17-12-61 ஞாயிற்றுக்கிழமை காலைவரை மடுவில் ஒரு ஞானெடுக்கம் நடைபெற ஒழுங்குகள் செய்துள்ளது.

மேற்படி ஞானெடுக்கத்திற் பங்குபற்ற விரும்பும் ஆசிரியர்கள் தயவு செய்து 30–11-61 க்கு முன்னர் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து செலவுவிபரங்களை அறிந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அ. சின்னப்பு,
(யா. மே. க. ஆ. ச. காரியதரிசி)
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம், 22-11-61.

## ரோமாபுரியில் பாப்...

[ 1-ம் பக்கத் தொடர்ச்சி ]

நல்லெண்ணமும் நிலவவேண்டுமென்ற அரியதோர் படிப்பினையை இங்கு நீங்கள் எடுத்துக்காட்டுகின்றீர்கள். ஒழுக்க, ஆன்மீக கட்டுப்பாடுகள் உங்களை இங்கு அந்நியோன்னியமாகப் பிணைத்துள்ளன,

உலக மக்களையும், தேசங்களையும் பிரித்துவைக்கும் உலோகாயத நாட்டங்களிலிருந்து மக்களைக் காத்து, அவர்களை ஒன்றுசேர்க்க வல்ல ஆன்மீகபலத்தை உணர்த்தும்படி தேவனை மன்றாடுங்கள் என்று பாப்பரசர் தமது பேட்டியின்போது குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் பேசுகையில், நீங்கள் பிரதிநிதித்துவம்வகிக்கும் நாட்டுமக்கள் உலக சமாதானத்தையே விரும்புகிறார்கள். உலக மக்களனைவருமே சமாதானத்தை ஆசிக்கிறார்கள் என்று துணிவாகக் கூறலாம். மக்கள், தங்கள் மேல் தொங்கிநிற்கும் உலகயுத்த அபாயத்தை எண்ணிக் கலங்கிக் குழப்பமடைந்திருக்கிறார்கள். இவ் அபாயத்திலிருந்து விடுபடவேண்டுமென்று அவர்கள் கருத்தாயிருக்கிறார்கள்.

நாங்கள் யாவரும் ஒருமனப்பட்டு உங்கள் தேசங்களையும், மனுக்குலம் முழுவதையும் ஒன்றுபடுத்தி, அவர்களுக்கு நல்ல புத்தி தீட்சையளித்துச் சமாதானத்தில் காப்பாற்றும்படி சருவவல்லப தேவனை மன்றாடுவோமாக.

மனுக்குலம் முழுதும் ஒருநாள் ஒன்றுகூடித் தங்களைச் சமாதானத்தில் காப்பாற்றிய தேவனைப் புகழ்ந்து நன்றிகூறவேண்டுமென ஆசிக்கின்றேன் என்று கூறிமுடித்தார் பாப்பரசர்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

நான் நினைத்தகாரியம் கூடியசீக்கிரம் கிடைக்கவேண்டுமென்று கைவிடப்பட்டவர்களின் மத்தியஸ்தராகிய அர்ச். யூதா ததேயுவிடம் தினமும் மன்றாடிவந்தேன். அம் மன்றாட்டின்பயனாய் அக்காரியம் அனுகூலமாயிற்று. அதற்கு நன்றித்துதியாக இதைப் பிரசுரிக்கிறேன். அவரின் நாமம் என்றும் வாழ்த்தப்படக்கடவது.

உமது அடியாள்

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Saturday November 25-1961.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கத்தோலிக்க பிரசுரங்கள்

| | ரூ. ச. |
|---|---|
| பாலர் குறிப்பிடம் ... | 1-00 |
| சின்னக் குறிப்பிடம் (4-ம் வ.) ... | 80 |
| ,, ,, (5-ம் வ.) ... | 80 |
| பெரிய குறிப்பிடம் (6-ம் வ.) ... | 75 |
| ,, ,, (7-ம் வ.) ... | 75 |
| ,, ,, (8-ம் வ.) ... | 75 |
| மெய்விவாகக் குறிப்பிடம் ... | 05 |
| உறுதிப்பூசுதற் குறிப்பிடம் ... | 05 |
| மாணவர் கிறிஸ்தவபோதகம் ... | 1-25 |
| சத்தியவேத தர்ப்பணம் போதககாண்டம் (Part I) ... | 2-50 |
| எனது பூசைப் புத்தகம் திவ்வியபூசைஆராதனையை முழுதாய் அடக்கியது. | |
| கிளேஸ் பேப்பர் ... | 5-50 |
| மோக்ஷபாதை (கலிக்கோ) ... | 4-00 |
| ,, (தோல்) ... | 6-00 |
| முத்தித்திறவுகோல் (கலிக்கோ) ... | 2-50 |
| ,, (தோல்) ... | 3-50 |
| செபச்செண்டு ... | 1-00 |
| பிரசித்த ஆராதனையின் சாதாரண செபங்கள் ... | 2-00 |
| நித்திய ஆராதனை ... | 25 |
| இரா ஆராதனை ... | 25 |
| திருமணித்தியாலம் ... | 40 |
| திவ்வியபூசை மகத்துவம் ... | 2-50 |
| பூசை உதவி மந்திரம் ... | 40 |
| பூசை உதவி மந்திரம் (மட்டை) ... | 05 |
| வேதாகமவாசிப்பு ... | 90 |
| சற்பிரசாத அன்பன் ... | 20 |
| யேசுநாதரின் சுவிசேஷம் அல்லது நான்கு சுவிசேஷங்களின் ஒப்புமை ... | 2-50 |
| அர்ச். மத்தேயு சுவிசேஷம் ... | 1-50 |
| அர்ச். மார்க்கு சுவிசேஷம் ... | 1-25 |
| அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் ... | 1-50 |
| பசாம் ... ... | 1-50 |
| சிலுவைப் பாதை ... | 30 |
| மகா மனந்திரும்புதல் இயக்கப் பிரசங்கங்கள் ... | 1-00 |
| சுவிசேஷ விரித்துரை (பசாமுடன்) ... | 6-50 |
| (பசாமில்லாமல்) ... | 5-00 |
| கத்தோலிக்கு கீர்த்தனமாலை லத்தீன் 1-ம் பகுதி (நோட்டில்லாமல்) ... | 75 |
| தமிழ் 2-ம் பகுதி (நோட்டில்லாமல்) | அச்சில் |
| இரண்டும்சேர்த்துக் கட்டியது (நோட்டில்லாமல்) | அச்சில் |
| லத்தீன் (1-ம் பகுதி நோட்டுகளுடன்) ... | 2-25 |
| தமிழ் (2-ம் பகுதி நோட்டுகளுடன்) ... | 2-25 |
| தமிழ் லத்தீன் இரண்டும் (நோட்டுகளுடன்) ... | 4-75 |
| ஆண்டவர் சரித்திரம் (Part I) ... | 90 |
| ,, (Part II) ... | 90 |
| ,, (Part III) | 90 |
| திருஇருதய வணக்கமாதம் ... | 1-50 |
| தேவமாதாவின் வணக்கமாதம் ... | 1-50 |
| மரியாயின் மாசில்லாத இருதயப் பொக்ஷம் ... | 1-50 |
| அவர்கள் மூன்று சிறுவர்கள் (பாத்திமா) ... | 2-50 |
| கிறீஸ்துநாதரும் அவருடைய போதனைகளும் ... | 1-50 |
| தருமஅப்பம் ... | 1-00 |
| பத்திச் சபைகள் ... | 20 |
| ஆத்தும தரிசனம் ... | 20 |
| தமிழரின் பூர்வசரித்திரம் ... | 50 |
| ஹெலேனு அல்லது திருக்காய அடையாளம்பெற்ற இலங்கைக் கன்னிகை சரித்திரம் ... | 35 |
| அர்ச். லூயிமேரி கிறிஞ்ஞோன் சிவிய சரித்திரம் ... | 40 |
| திருச்சடங்குக் கோவை ... | 3-50 |
| ஆத்துமாக்களின் அழுகைக்குரல் ... | 1-50 |
| ஞானவொடுக்கப் பிரசங்கம் ... | 1-50 |
| இலங்கும் மங்கைமுடி ... | 30 |
| அர்ச். வாரம் ... | 95 |
| தபசுகாலநிருபமும், சுவிசேஷமும் மலிவுப் பதிப்பு ... | 2-00 |
| உயர்ந்த பதிப்பு ... | 2-25 |
| பாலகயேசுவுக்குப் பெற்றோரின் காணிக்கை ... | 03 |
| நற்கருணை வீரன் ... | 05 |
| சுகிர்த செபங்கள் ... | 10 |

- தபாற்செலவு பிரத்தியேகம்.
- புஸ்தகப் பெறுமதியின் அரை வாசிப்பணம் அனுப்பாத வி.பி.பி. கவனிக்கப்படமாட்டாது.

அதிபர்,
சஞ்சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்களிடம் விற்பனைக்கு!



### பாலர் குறிப்பிடம்

2-ம், 3-ம் வகுப்பு ... 1-00

*

### சின்னக் குறிப்பிடம்

நாலாம் வகுப்பு ... -80
ஐந்தாம் வகுப்பு ... -80

*

### பெரிய குறிப்பிடம்

ஆறும் வகுப்பு ... -75
ஏழாம் வகுப்பு ... -75
எட்டாம் வகுப்பு ... -75

*

### மாணவர் கிறிஸ்தவ போதகம்

சிரேஷ்ட வகுப்பு ... 1-25

*

### நவமணி வாசகம்

கீழ்ப்பிரிவு ... -50
மேற்பிரிவு ... -50
இரண்டாம் வகுப்பு ... -60
மூன்றும் வகுப்பு ... -70
நாலாம் வகுப்பு . -80
ஐந்தாம் வகுப்பு ... -90
ஆறும் வகுப்பு இல்லை
ஏழாம் வகுப்பு ... 1-00

*

### கத்தோலிக்க வாசகம்

கீழ்ப்பிரிவு இல்லை
மேற்பிரிவு ... -50
இரண்டாம் வகுப்பு இல்லை
மூன்றும் வகுப்பு ... -70
நாலாம் வகுப்பு இல்லை
ஐந்தாம் வகுப்பு ... -90

### தமிழ் அறிவு

உயர்தர வகுப்பிற்குரியது
எழுதியவர்: க. பே. முத்தையா
பாடநூற் பிரசுர ஆலோசனைச்சபை அங்கீகரித்தது.
பிரதி விலை: 3-50.

*

### தமிழ்ப் பயிற்சி

ஆசிரியர்கள்:
க. பே. முத்தையா — ம. விக்ரர்

இரண்டாம் வகுப்பு ... -65
மூன்றும் வகுப்பு ... -90
நாலாம் வகுப்பு ... 1-25

*

### வளரும் தமிழ்

ஆசிரியர்:
G. J. ஆசிநாதன்

பகுதி—I ... 1-30
பகுதி—II ... 1-75
பகுதி—III ... 2-75

*

### திருச்சடங்குக் கோவை

பிரதி விலை: 3-50.
பூசைஉதவி மந்திரச்சுருக்கம் -05
ஆசிரீர் ஒரு ஞானப்பொக்ஷம் -05

*

### யேசுக்கிறீஸ்துநாதருடைய பரிசுத்த சுவிசேஷம்

அர்ச். மத்தேயு ... 1-50
அர்ச். லூக்கா ... 1-25
அர்ச். மாற்கு ... 1-50
அப்போஸ்தலர் நடபடிகள் 1-00

*

**A Set of Roman Brevary In 2 Parts By Mame.**

அதிபர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org